

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 115 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 18 – திங்கள்கிழமை 04 டிசம்பர் 2023 – கோவை ★ ★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 115: Thiruvalluvar Year - 2054 - Karthigai 18 - Monday 04 December 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (11)

# சாக்ரடீஸ் சாகாத சரித்திரம்! (2)



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘இளைஞர்களுக்கு வழி விடுவோம்’ எனும் தலைப்பில் முரசொலி’யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 ‘கலைஞர் கடிதங்கள்’ எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

வைர நெஞ்சம் படைத்த உலகப் புரட்சியாளர்களின் வரலாற்றில் ஒரு முக்கிய இடத்திற்குரியவர் தத்துவ மேதை சாக்ரடீஸ் - ஏதென்ஸ் வழங்கிய ஈடற்ற மேதை - கிரேக்கத்து அறிவுக்கிழவர்!

அவர் தயாரித்த பிளேட்டோ, இன்றைய அரசியல் கருத்துக்கள் பலவற்றிற்குத் தந்தையாக இருக்கிறார்.

கார்ல் மார்க்சும், பிரடரிக் ஏங்கல்சும் தயாரித்து, லெனின் - ஸ்டாலின் போன்றோரால் புடம் போட்டு எடுக்கப்பட்ட பொது உடைமைத் தத்துவம், பிளேட்டோ என்னும் சிந்தனை உலைக் கூடத்தில் தயாரானதுதான்.

ஹெகெல் என்னும் ஜெர்மன் நாட்டுத் தத்துவ ஞானி, பிளேட்டோவின் உலைக் கூடத்தைப் பயன்படுத்தித்தான் புளித்துப் போன நாஜிசக் கருத்துக்களுக்கு ஜாடை காட்டினான். அந்தக் கட்டாரியைக் கொண்டு தவறான வழியில் பயன்படுத்தி தலைகொய்யப் புறப்பட்டனர், இட்லர் - முசோலினி போன்ற எதேச்சாதிகாரிகள்!

இதுபோன்ற நல்லனவற்றிற்கும் தீயனவற்றிற்கும் மூலப் பொருள் உதவியவர் பிளேட்டோ. அந்தப் பிளேட்டோவைத் தயாரித்ததோ சாக்ரடீஸ்.

வரலாறு கூறுகிறபடி சாக்ரடீஸ், சாவுக்குப் பயப்படாத முதல் மனிதன் மட்டுமல்ல, இதுபோன்ற பல தகுதிகளுக்கும் உரிமையாளர்.

அறிவுலக ஒளிச்சுடராகச் சாக்ரடீஸ் நடமாடியதை, இந்தச் சிறு நாடகம் மூலம் இங்கே சித்திரித்திருக்கிறேன். நேற்றையதினம் விடுபட்ட இடத்திலிருந்து தொடர்ந்திடுக!

**காட்சி - 4 (தொடர்ச்சி)**

**நீதிபதி** : - சாக்ரடீஸ்! உம்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களுக்கு நீர் சொல்லும் சமாதானமென்ன?

**சாக்ரடீஸ்** : - என் சமாதானங்களைக் கேட்டு, இளகாத சட்டம் கூட இரக்கம் காட்டலாம் - ஆனால், இந்தச் சபை எனக்காக இரங்குமா?

**அனிடஸ்** : - பார்த்தீர்களா, சட்டத்தையும், சபையையும் அவமதிக்கிறான்! இப்படித்தான் இளைஞர்களையெல்லாம் கெடுத்தான்!

**சாக்ரடீஸ்** : - இளைஞர்களை ஒரு கிழவன், எப்படியப்பா கெடுக்க முடியும்?.... நானென்ன, வாலிபர்க்கு வலை வீசும் விலை மாதா?....பருவ விருந்தளிக்கும் பாவையா?

**மெலிடஸ்** :- மாதரிடம் இல்லாத மயக்கு மொழி... வாலிபர்க்கு வலை வீசும் வனிதையரும் பெற்றிடாத வசீகரச் சொல் அலங்காரம் - வார்த்தை ஜாலம் - அடுக்குத் தொடர் - இப்படிப் பல மாயங்கள் கற்றவர் நீர் !. . . .

**சாக்ரடீஸ்** : - மந்திரவாதி என்றுகூடச் சொல்வாய்! . . . . அன்புள்ள இளைஞனே! . . . . இளைஞர்களை நான் கெடுக்கிறேனா? இல்லை அவர்களாக வந்து கெடுகிறார்களா?

**மெலிடஸ்** : - நீரே வலியச் சென்று கெடுக்கிறீர்!... சந்தை கூடும் இடங்களிலே சந்து முனைகளிலே, சாலையோரங்களிலே, நடுத்தெருக்களிலே, நாலு பேர் சேருகிற மர நிழல்களிலே உமது பிரசங்கம் நடைபெறாத நேரமே கிடையாது!

**சாக்ரடீஸ்** : - ஏதென்சு நகரத்தில் நான் ஒருவன்தான் இளைஞர்களைக் கெடுக்கிறேன்.... இல்லையா?

**மெலிடஸ்** : - ஆமாம்.

**சாக்ரடீஸ்** :- நீ கெடுக்கவில்லை!

**மெலிடஸ்** : - இல்லை!

**சாக்ரடீஸ்** :- அனிடஸ்?

**கலைஞர் கடிதம்**

**மெலிடஸ்** : - இல்லை!


**சாக்ரடீஸ்** : - சிற்பி லைகன்?

**மெலிடஸ்** : - இல்லை!

**சாக்ரடீஸ்** : - இந்த நீதிபதிகள்?

**மெலிடஸ்** : - இல்லை!

**சாக்ரடீஸ்** : - யாருமே இளைஞர்களைக் கெடுக்கவில்லை! எல்லோரும் இளைஞர்களுக்கு நன்மையே செய்கிறார்கள், என்னைத் தவிர!....



**சாக்ரடீஸ்**

**மெலிடஸ்** : - ஆமாம் - ஆமாம்!

**சாக்ரடீஸ்** :- இவ்வளவு பேரும் - ஏன் - ஏதேன்சு நகரமே இளைஞர்களைத் திருத்தும் போது, நான் ஒருவன் அவர்கள் பாதையைத் திருப்பிவிட முடியுமா?.....

**மெலிடஸ்** : - ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்! .....

**சாக்ரடீஸ்** : - ஏன், இப்படியும் சொல்லலாமே ....... இருண்ட வீட்டுக்கு ஓர் ஒளிவிளக்கு!...... என்ன மெலிடஸ் திகைக்கிறாய்? அனிடசின் அரசியல் மேதாவிலாசத்தாலும், உன்னுடைய அளவுக்கு மீறிய கற்பனைக் கவிதைகளாலும் கவர முடியாத காளைகளை நான் கவருகிறேன் என்றால் - அந்தப் பெருமை எனக்கல்ல! என்னையும், ஏதென்சு நகரத்தையும் வாழ்விக்கத் தகுந்த அந்தக் கொள்கைகளுக்கே அந்தப் பெருமை!... சபையோர்களே!.... வாலிபர்கள் என்னைச் சுற்றி வானம்பாடிகள் போல் வட்டமிடக் காரணம்,

**தொடர்ச்சி 3 ஆம் பக்கம்**

---

## கடும் மழை, புயல்: நிவாரணப் பணிகளில் ஈடுபடும் அரசு அதிகாரிகளுக்கு

# மக்கள் பிரதிநிதிகள் துணை நிற்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, டிச.4-**

**கனமழை காரணமாக நிவாரணப் பணிகளில் ஈடுபடும் அரசு அதிகாரிகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் துணை நிற்க வேண்டும்என்றுமுதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி உள்ளார்.**

**இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில்**

**அடுத்த இரு நாட்களுக்கு மழை/கன மழை பெய்யும் என எச்சரிக்கை வெளியிடப்பட்டிருக்கும் நிலையில் அமைச்சர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக அமைப்புகளில் உள்ள அனைத்து நிர்வாகிகளும் அவர்களது பகுதியில் மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு உதவிட வேண்டும். நிவாரணப் பணிகளில் ஈடுபடும் அரசு அதிகாரிகளுக்குத் துணை நிற்க வேண்டும் என உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன் என்று வலியுறுத்தி உள்ளார்.**

உதவிக்கு TN SDMA மாநில உதவி எண்: 1070, மாவட்ட உதவி எண்: 1077, வாட்சாப்: 94458 69848, Chennai Corp : 1913 என்கிற தொலைபேசி எண்களை அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாட்டில் கடந்த இரண்டு நாட்களாக கடும் மழை பெய்து வருகிறது. இதனால் பொதுமக்களுக்கு ஏற்பட்டு வரும் சொல்லொணா துயரை துடைக்க அரசு இயந்திரம் முடுக்கி விடப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் மழை காரணமாக மாநிலம்முழுவதும் நிலவும் நிலைமைகளை கூர்ந்து கண்காணித்து அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகளை நிவாரணப் பணிகளில் ஈடுபட கேட்டுக்கொண்டார்.

சென்னையில் புயல் எச்சரிக்கை மையத்தில் அரசு அதிகாரிகள் மேற்கொண்டு வரும் பணிகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அம்மையத்தில் பொதுமக்களிடமிருந்து தொலைபேசி மூலம் வந்த குறைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களே நேரடியாகத் தொடர்புகொண்டு, குறைகளை கேட்டறிந்ததோடு, உடனிருந்த அதிகாரிகளிடம் அந்தக் குறைகளை உடனுக்குடன் களைய உத்தரவிட்டார்.

கடும் மழை காரணமாக எந்த ஒரு பகுதிகளிலும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்றிரவு கீழ்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

**அடுத்த இரு நாட்களுக்கு மழை/கன மழை பெய்யும் என எச்சரிக்கை வெளியிடப்பட்டிருக்கும் நிலையில் அமைச்சர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக அமைப்புகளில் உள்ள அனைத்து நிர்வாகிகளும் அவர்களது பகுதியில் மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு உதவிட வேண்டும். நிவாரணப் பணிகளில் ஈடுபடும் அரசு அதிகாரிகளுக்குத் துணை நிற்க வேண்டும் என உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்** என்று வலியுறுத்தி உள்ளார்.

---

### பெரியாரியப் பெரும்பணி தொடர வேண்டும்!

## தங்களின் வழிகாட்டுதல் - தொடர்ந்து எங்களுக்குக் கிடைக்க வேண்டும்!

### திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி பிறந்தநாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, டிச. 4-**

**திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், “பெரியாரியப் பெரும்பணி தொடர வேண்டும்!” தங்களின் வழிகாட்டுதல் தொடர்ந்து எங்களுக்குக் கிடைக்க வேண்டும்! என உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டுள்ளார்.**



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

அகவையில் மட்டுமல்ல, சுறுசுறுப்பிலும் எங்களை எல்லாம் மிஞ்சிய மானமிகு அய்யா ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் 91ஆவது பிறந்த நாளில் நேரில் வாழ்த்தி வணங்கினேன்.

தங்களின் வழிகாட்டுதல் தொடர்ந்து எங்களுக்குக் கிடைக்க வேண்டும்.

பெரியாரியப் பெரும்பணி தொடர வேண்டும்!

சமூகநீதிக் களத்தில் "வீரமணி வெற்றிமணியாக ஒலிக்க வேண்டும்"!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.









மாநில உரிமை மீட்பு முழக்கமாக, கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை வெற்றி மாநாடாக்கிடும் வகையில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில், தி.மு.க இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.கழகத்தால் தொடங்கப்பட்டுள்ள, 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கத்திற்கு ஆதரவளித்து நீலகிரி மாவட்டத்தில் நீட்டுக்கு எதிராக பெறப்பட்ட 30 ஆயிரத்துக்கும் அதிகமான கையெழுத்துகளை கொண்ட அஞ்சல் அட்டைகளை, அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா வழங்கினார். இதில் அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் கழக நிர்வாகிகள், தோழர்கள், இளைஞரணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துக்கு

# 'விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்' பட்டம்!

## திராவிட மாடல் அரசின் முயற்சிகளுக்கு சான்று என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, டிச 4-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பாக 2023க்கான'விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்' என்ற பட்டத்தை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பெற்றிருப்பதை குறித்து ட்விட்டர் பக்கத்தில் நெகிழ்ந்து பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் கீழ் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) சார்பில் 2023க்கான 'விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்' விருது வழக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டிருப்பது, "இந்த அங்கீகாரம், தமிழகத்தில் விளையாட்டு சாம்பியன்களை உருவாக்கி வளர்ப்பதற்கு நமது திராவிட மாடல் அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஒரு சான்றாகும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முயற்சிகளை அங்கீகரித்ததற்காக இந்திய தொழில் கூட்டமைப்புக்கு (CII) நன்றி தெரிவிக்கிறேன்." என குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இந்திய தொழில் கூட்டமைப்பின் தொழில் மற்றும் விளையாட்டு துறை சார்ந்த ஸ்கோர்க் கார்ட் (Scorecard) கருத்தரங்கத்தின் 8வது பதிப்பு டெல்லியில் வருகின்ற டிசம்பர் 4ம் தேதி ஹயாத் ரெஜென்சியில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம் என்ற விருதை வழங்கவுள்ளார்கள்.

இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) என்பது இந்தியாவின் முதன்மையான வணிக கூட்டமைப்பாகவும், இதில் நாடு முழுவதும் 9,000 உறுப்பினர்கள் மற்றும் 300 தேசிய மற்றும் சர்வதேச பெருநிறுவன பங்குதாரர்கள் உள்ளனர். இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) இந்தியாவின் தொழில் மற்றும் வணிக சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மேலும் அரசுடன் இணைத்து பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கும் கொள்கை வடிவமைப்பு என பல்வேறு வகையில் இணைத்து செயல்பட்டுவருகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாநிலத்தில் விளையாட்டு வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றுகிறது, சமூகத்தின் அனைத்து பகுதிகளிலிருந்து அனைவரும் பங்கேற்பதை ஊக்குவிக்க பல்வேறு முயற்சிகளை செயல்படுத்துகிறது. குறிப்பாக முக்கிய விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவதிலும், உள்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும், விளையாட்டு வீரர்களின் நலன் காப்பதிலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிட மாடல் அரசின் முயற்சிகளுக்கு கிடைத்த சான்று என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




மாநில உரிமை மீட்பு முழக்கமாக, கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை வெற்றி மாநாடாக்கிடும் வகையில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில், தி.மு.க இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாநாட்டு நிதியாக நீலகிரி மாவட்ட கழகம் ரூ.1 கோடியும், இளைஞர் அணி அமைப்பாளர் சார்பில் ரூ.10 லட்சம், இளைஞர் அணி நிர்வாகிகள் சார்பில் ரூ.12 லட்சம் ஆகிய தொகைக்கான காசோலையினை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினர். இதில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆர்.இராசா எம்.பி., அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் கழக நிர்வாகிகள், தோழர்கள், இளைஞரணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் பெத்தநாய்க்கன் பாளையத்தில் மாநில தி.மு.க இளைஞரணியின் 2வது மாநாடு டிச.17ல் நடைபெறுவதையொட்டி பந்தல் திடல் அமைக்கும் பணி நடை பெற்று வருவதை கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம். ஆகியோர் பார்வையிட்டனர். உடன் சேலம் மாவட்ட தி.மு.க. செயலாளர்கள். எஸ்.ஆர். சிவலிங்கம் (கிழக்கு) இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. (மத்திய மாவட்டம்) டி.எம்.செல்வகணபதி (மேற்கு) எஸ்.ஆர்.பார்த்திபன் எம்.பி. கிழக்கு மாவட்ட துணைச்செயலாளர்கள். க சுரேஷ்குமார். கு.சின்னதுரை, ஏ.ஏ.ஆறுமுகம், பூலாவரி எஸ்.சேகர் உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.

# இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (11)

# சாக்ரடீஸ் சாகாத சரித்திரம்! (2)

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

என்னுடைய வார்த்தை அலங்காரம் அல்ல! வளங்குறையாத கருத்துகள் - தரங்குறையாத கொள்கைகள் இந்தத் தரணிக்குத் தேவையான தங்கம்நிகர் எண்ணங்கள்!.....

அழகு மொழியால், அலங்கார அடுக்குகளால், அரும்பு உள்ளங்களை மயக்குகிறேன் என்கிறார்களே, அவர்களைக் கேட்கிறேன், அந்த மொழி எனக்கு மட்டும் சொந்தமல்லவே - அனிடசும்; மெலிடசும் அதைப் பேசக்கூடாது என்று நான் தடை போட்டது கிடையாதே! பேசிப் பார்க்கட்டுமே அவர்களும் - பாவம், பேசித் தோற்றவர்கள்! மொழியிலே அழகு குறைந்ததால் அல்ல - எண்ணத்தில் இழுக்கு நிறைந்து விட்டதால்! இருள் படிந்து விட்டதால்!

நாட்டிலே நீண்ட நாட்களாகச் சூழ்ந்திருக்கும் இருளை விலக்க முயல்கிறேன், குறுகிய காலத்தில்! அதற்குப் பரிசு, 'சாக்ரடீஸ் தீமை செய்பவன் - விண்ணிலும் மண்ணிலும் என்ன இருக்கிறது என்று தேடிப் பார்க்கும் நாத்திகன் - பொய்களை உண்மையாக்கும் புரட்டன்' - இப்படியெல்லாம் பட்டங்கள் - குற்றச்சாட்டுகள்! பரவாயில்லை! எழுபது வயதுக்கு மேல் முதன்முதலாகக் குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் எனக்கு, எப்படியும் மரண தண்டனை அளித்து விட வேண்டுமென்று மெலிடஸ், அனிடஸ் போன்றவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள்.

இன்னும் சில வருடங்களில் - சில மாதங்களில் - அவர்களது ஆசை தானாகவே நிறைவேறி விடலாம்! அவ்வளவு கிழவனாகி விட்டேன் நான்! அதற்குள் அவசரப்பட்டு, சாக்ரடீசைக் கொன்றோம் என்ற அநியாயப் பழியை ஏன் தேடிக் கொள்கிறார்களோ, தெரியவில்லை.

**நீதிபதி** : - சாக்ரடீஸ், பேச்சை நிறுத்தும்! மரண தண்டனை - சிறைவாசம் - நாடு கடத்தல் - அபராதம் வசூலித்தல் - இப்படிப் பல தண்டனைகள் உமக்குத் தரப்படலாம். அவைகளில் நீர் எதை விரும்புகிறீர்?

**சாக்ரடீஸ்** : - நான் சாவதாக இருந்தால் ஏதென்ஸ் நகரத்திலே, முப்பது பேர் கொண்ட சபையின் ஆட்சி நடைபெற்றதே - அதில் நான் ஒரு நிர்வாக அங்கத்தினனாகப் பதவி வகித்து, ஆர்ஜீனா போர்க் களத்தில் மாண்ட வீரர்களின் சவங்களையும், உடைந்த போர்க் கப்பல்களையும் எடுத்து வராத குற்றத்திற்காகத் தளபதிகள் விசாரணை செய்யப்பட்டபோது அந்தச் சபையின் அநீதியைக் கண்டித்து வெளியேறினேனே? அன்றே கொல்லப்பட்டிருப்பேன்! அதைத் தொடர்ந்து, லீனான் என்பவனைக் கொலை செய்து வர என்னையும் மற்ற மூவரையும் சபை அனுப்பியபோது, அதை மறுத்து வீட்டுக்குப் போய் விட்டேன். அப்படி மறுத்ததற்கே எனக்கு மரண தண்டனை கிடைத்திருக்கும், அப்போதே! நல்லவேளை அந்தச் சபை கிரேக்க நாட்டு நீதிமன்றம், சாக்ரடீஸின் பிணத்தைக் காண வேண்டுமென்று விரும்பினால், அதற்கு நான் தடையாக இருக்க முடியாது!

சிறைவாசம் அனுபவிக்கிறேன் எனக் கேட்கலாம் - அதிகாரிகளின் நிரந்தர அடிமையாகச் சிறையில் கிடப்பதை விடச் செத்து மடிவது மேல்!

அபராதம் கட்டினால் விட்டு விடுவீர்கள்! ஆனால், அந்த அளவுக்கு நான் பணக்காரனாக இருந்திருந்தால், அபராதங் கட்டக் கூடிய பணவசதி உள்ள அளவுக்குப் போதுமான குற்றங்களைச் செய்திருப்பேன்! நாடு கடத்தலை ஏற்கலாம் - வேறு நாட்டில் சுதந்திரமாகத் திரியலாம் - ஆனால், என்னுடைய கொள்கைகளை என்னுடைய சொந்த நாடே ஏற்க மறுக்கும்போது பிற நாடுகளில் வரவேற்பார்கள் என்று என்ன நிச்சயம்? இதனால், எனதருமை ஏதென்ஸ் நகரத்துப் பெருமக்களே! நான் செய்த காரியங்களுக்குத் தண்டனையாக ஒலிம்பியாவில் நடக்கும் குதிரை ரதப் போட்டியில் ஜெயித்தவனுக்கு வீரமானியம் கொடுப்பது போல் எனக்கும் கொடுத்து, என்னை ஆனந்தமாக வாழ விடுங்கள்! என் இலட்சியப் பிரச்சாரத்திற்குத் தேவையான வசதிகளை இடைவிடாது செய்து தாருங்கள்! அது தான் நீங்கள் எனக்கும் என் கொள்கைக்கும் காட்டுகிற மரியாதையாகும்!

(சபையோர் திகைப்பு)

**நீதிபதி** :- அலட்சியமான பேச்சு!.... அவமதிப்பு!.... வாக்கெடுப்பு நடைபெறட்டும்! சாக்ரடீசுக்கு மரணமா?..... மன்னிப்பா?..... என்று சங்குகள் மூலம் வாக்களியுங்கள்!

(வாதியிடம் உள்ள பலகையிலும், பிரதிவாதிக்கு நேரே உள்ள பலகையிலும் நீதிமன்றத்தினர் தங்கள் இஷ்டப்படி "சங்கு"களை அடுக்குகிறார்கள். வாக்கெடுப்பு முடிகிறது. "சங்கு"கள் எண்ணப்படுகின்றன. 'மரணம்' என்று 281 சங்குகளும், 'மன்னிப்பு' என்று 220 சங்குகளும் கணக்கிடப்படுகின்றன. சபை, சாக்ரடீஸின் முகத்தைப் பார்க்கிறது. அவனது கண்களிலே புதிய ஒளி பிறக்கிறது)

**நீதிபதி** :- மன்னிக்கும்படி 220 வாக்குகள்! மரண தண்டனை அளிக்கும்படி 281 வாக்குகள்! வாக்கெடுப்பின்படி, சாக்ரடீசுக்கு விஷம் தரப்பட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்!

**சாக்ரடீஸ்** :- ஏதென்ஸ் நகரத்து நீதிமன்றம் பெருமைக்குரிய தீர்ப்பை அளித்து மௌனப் புன்னகை புரிகிறது! உலக சரித்திரத்திலே இடம் பெறுகிற இந்த ஏதென்சுத் தீர்ப்புக்கு ஆளாகிவிட்ட பெருமை முதன்முதலாக எனக்குக் கிடைத்திருக்கிறது! 'அறிவு விளக்கைக் கையிலே ஏந்து' என்று கூறியதற்கு அழிவைப் பரிசாகத் தரும் புண்ணிய காரியத்தை நிறைவேற்றி விட்டார்கள்! 281 - 220!......... முப்பத்தொரு வாக்குகள், இப்படித் திரும்பி விழுந்திருந்தால் சாக்ரடீஸ் காப்பாற்றப்பட்டிருக்கலாம்! அந்த வாக்குகளும் ஆயிரக்கணக்கான நாணயங்கள் செலவிடப்பட்டு வாங்கப்பட்டவை என்பதைக் கூறாமலிருக்க முடியாது! கவலையில்லை! இந்த மன்றத்தின் முறைப்படிப் பேசிச் சாவது எவ்வளவோ மேன்மையானது!...... எனக்குத் தெரியும்; ஒரு மனிதன் - எதையும் பேசி, எதுவும் செய்து, மன்னிப்புக் கேட்கத் தயாராயிருந்தால் இதுபோன்ற தண்டனைகளிலேயிருந்து நிச்சயம் மீளலாம்! களத்திலே எதிரியின் காலில் விழுகிற போர் வீரனாக மாறிவிட நான் நினைத்ததில்லை. அதனால் மரணத்தைப் பரிசாகப் பெற்றிருக்கிறேன்.

**காட்சி - 5**

சிறைச்சாலை

(சாக்ரடீஸ் காலிலே சங்கிலி பூட்டப்பட்டுச் சிறிய இடத்திலே அங்குமிங்கும் உலவிக் கொண்டிருக்கிறான். கதவு திறக்கப்படுகிறது கிரிட்டோ வருகிறான்)

**சாக்ரடீஸ்** :- கிரிட்டோ! என் அருமை நண்பா!

வா வா .....

(வெளியே வந்து பார்த்து) ..... ஓ ..... அது யார்?

**கிரிட்டோ** :- உன் மனைவி ..... குழந்தைகள்!

(பெரிய குழந்தைகள் இருவரும், கைக் குழந்தையை ஏந்தியபடி எக்ஸேந்திபியும் உள்ளே வருகிறார்கள் கண்ணீர் வடித்தபடி .....)

**சாக்ரடீஸ்** :- எக்ஸேந்திபி! .....

(அவள் அழுகிறாள், குழந்தைகள் அழுகிறார்கள், பச்சைக் குழந்தையும் வீறிட்டு அழுகிறது)

**சாக்ரடீஸ்** :- அன்புள்ளவளே!..... பார்த்தாயா?..... பயனற்ற தத்துவ விசாரணையில் காலத்தைக் கழிக்கிறேன்; தர்க்கவாதம் புரிந்து தொல்லைப்படுகிறேன் என்றெல்லாம் கோபித்துக் கொண்டாயே; இப்போது பார், உன் கணவன் அகிலம் புகழும் வீரனாக, தேசம் புகழும் தியாகியாக மாறிவிட்டான்!.... எக்ஸேந்திபி! நீ பாக்கியசாலிதான்! படைபலம், பணபலம் அத்தனை பலத்தையும் எதிர்த்து நின்று, யாருக்கும் பணியாத பெருமையோடு, விழிகளைக் கடைசியாக மூடப்போகும் கர்மவீரனுக்கு நீ மனைவி!..... குழந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்! அவர்கள் பெரியவர்களாக மாறி, நேர்மை தவறி நடந்தால், நான் உங்களைத் திருத்த முயன்றது போல், நீங்களும் அவர்களைத் திருத்த முயலுங்கள்; போ..... நேரமாகிறது..... காவலர்கள் கோபிப்பர்!..... கிரிட்டோ, இவர்களை அனுப்பி வை!

(கிரிட்டோ அவர்களை வெளியே அழைத்துச் செல்கிறான். பிறகு கிரிட்டோ மட்டும் உள்ளே வருகிறான்)

**சாக்ரடீஸ்** :- கிரிட்டோ! உனக்குத் தெரியுமல்லவா?..... முப்பது நாள் சிறை வாழ்வு இன்றோடு முடிவடைகிறது! நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி.... விஷம் சாப்பிட்டுச் சாக வேண்டிய நன்னாள் இன்றுதான்!

**கிரிட்டோ** :- சாக்ரடீஸ்! தத்துவ வாதங்களால் அழிக்க முடியாத உன்னை, விஷம் அழிக்கப் போகிறது!.....

ஒரு யோசனை நண்பா!..... இன்னும் நேரமிருக்கிறது; என்னிடமோ மின்னும் தங்கமிருக்கிறது! காவலர்களை வசப்படுத்திக் கொண்டு எப்படியாவது தப்பிவிட்டால்.....?

**சாக்ரடீஸ்** :- வெட்கப்படுகிறேன் கிரிட்டோ! ..... சாக்ரடீஸ் சாவுக்குப் பயந்தவனல்ல..... நீதிமன்றம் விதித்த நிபந்தனைகளைப் பற்றி நான் சர்ச்சை செய்ததும், அபராதங்கட்டத் தயாராக இருப்பதாகக் கூறியதும், தேசப் பிரஷ்ட உத்திரவு பற்றி வியாக்யானம் கூறியதும், என் பிரச்சாரத்தின் நோக்கம் பற்றிப் பெரியதோர் பிரசங்கம் செய்ததும் - மரணத்திற்கு பயந்து அல்ல! இவ்வளவுக்கும் தயாராக இருந்தும், கிரேக்க நாட்டு நீதிமன்றம் வீணாக சாக்ரடீசை அழித்துவிடும் வெறிச் செயலில் ஈடுபட்டது என்பதை நிரூபிப்பதற்காகத்தான்! அதை வைத்து நான் சாவுக்கு அஞ்சுகிறேன் என்று கணக்கிட்டு விடாதே கிரிட்டோ! ..... பிளேட்டோ, கிரிட்டோ, அப்போலடோரஸ் முதலிய நண்பர்களையும், மனைவி மக்களையும், எனதருமை ஏதென்ஸ் நகரத்தையும் விட்டுப் பிரியும் நேரம் நெருங்கிக் கொண்டேயிருக்கிறது; உள்ளே எனக்காக விஷம் தயாராகிக் கொண்டேயிருக்கிறது! இன்னும் கால் நாழிகையில் காவலன் வந்து விடுவான், கடும் விஷத்தோடு!

**கிரிட்டோ** :- அருமை நண்பா! மலை குலைந்தாலும் மனங்குலையா மாவீரா! உன் ஒளிவீசும் சுழற்கண்களை, துடிக்கும் அகன்ற புருவங்களை, தொகை தொகையாகப் பகைவரினும் துவளாது தத்துவ விளக்கம் கொட்டும் உணர்ச்சி மிக்க உதடுகளை இனி ஒரு சாக்ரடீஸ் உருவத்திலே நான் காணப் போகிறேனா?

**சாக்ரடீஸ்** :- அழாதே நண்பா! அதோ வந்து விட்டது அமுதம்! அறிவுப் படைக்கு இந்த அரசாங்கம் வைக்கும் விருந்து! தள்ளாத கிழவனுக்கு இந்தப் பொல்லாத நாடு தரும் பரிசு! அதோ வந்து விட்டது!

(காவலன் விஷக் கிண்ணத்துடன் வருகிறான்)

**சாக்ரடீஸ்** :- சிறைக்காவலா! இதை என்ன செய்ய வேண்டும்? முறைகளைச் சொல்லு!

**காவலன்** :- (சாக்ரடீசின் விலங்குகளை அவிழ்த்து விட்டு அழுதபடி) பெரியவரே! விஷத்தை முழுவதும் குடிக்க வேண்டும்..... பிறகு இங்குமங்கும் நடந்து கொண்டேயிருக்க வேண்டும்! கால்கள் மரத்துப் போகும் வரையிலே அப்படி நடக்க வேண்டும்..... பிறகு உட்காரலாம்..... கொஞ்சம் கொஞ்சமாக உடம்பு சில்லிட்டுக் கொண்டே வரும். பிறகு படுத்துவிடலாம்.

**சாக்ரடீஸ்** :- ஆனந்தமான நித்திரை! கனவு மங்கையாலும் கலைக்க முடியாத நித்திரை! ..... காவல! கொடு இப்படி!

(விஷக் கிண்ணத்தை வாங்குகிறான்)

**கிரிட்டோ** :- நண்பா!..... சிறிது நேரம் பொறுத்துக் கூடச் சாப்பிடலாம்! சிறைச்சாலையிலே அதற்கு அனுமதி உண்டு.

**சாக்ரடீஸ்** :- கிரிட்டோ! உனக்கு மிகவும் அற்ப ஆசை! விஷத்தை இன்னும் இரண்டு நாழிகை கழித்துச் சாப்பிடுவதாக வைத்துக் கொள்! அதற்குள் திடீர் என்று இருதயம் வெடித்து நான் இறந்துவிட்டால்..... கிரேக்க நாட்டு நீதிமன்றத்தின் தண்டனையை எப்படி நிறைவேற்றுவது?..... புதிய சாக்ரடீசா பிறந்து வருவான்? கூடாது; கூடாது..... இப்போதே சாப்பிடுகிறேன்.....

**கிரிட்டோ** :- நண்பா! கடைசியாக எனக்கு ஏதாவது சொல்லு!

**சாக்ரடீஸ்** :- புதிதாக என்ன சொல்லப் போகிறேன் - உன்னையே நீ அறிந்து கொள்! எதையும் ஏன், எப்படி, எதற்காக என்று கேள்! அப்படிக் கேட்டதால்தான் சிலைவடிக்கும் இந்தச் சிற்பி சிந்தனைச் சிற்பியாக மாறினேன். "அவர் சொன்னார்; இவர் சொன்னார் என்று நம்பி அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம் - எவர் சொன்ன சொல்லானாலும் அதனை உந்தன் இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்" இதைத்தான் உனக்கும், இந்த உலகத்திற்கும் சொல்ல விரும்புகிறேன்.

**கிரிட்டோ** :- ஏதென்சின் எழுச்சிமிக்க சிங்கமே! எங்கள் தங்கமே!..... கிரேக்கப் பெரியாரே! எம்மையும் உம்மையும் இந்த விஷம் பிரிக்கப் போகிறதா?..... அய்யகோ, நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறதே! சாக்ரடீஸ்..... உனது சவத்தை எப்படி அடக்கம் செய்ய வேண்டும்?.....

**சாக்ரடீஸ்** :- புதைப்பதாயிருந்தால், இந்த நாட்டில் உலவும் புளுகு மூட்டைகளையும் என்னோடு போட்டுப் புதைத்து விடு!..... எரிப்பதாயிருந்தால், ஏமாற்றுக்காரர்களின் சுவடிகளையும் என்னோடு சேர்த்துச் சுட்டுச் சாம்பலாக்கித் தண்ணீரில் கரைத்து விடு!..... விடை கொடு. விஷம் அழைக்கிறது!..... என் தேசத்துப் பெருமக்களிடம் விடைபெற்றுக் கொள்ளப் போகிறேன்.....

எனதருமை ஏதென்சு நகரத்துப் பெருமக்களே! இதோ சாக்ரடீஸ் சந்தோஷமாகச் சாகப் போகிறான்!..... கிரேக்க நாட்டு நீதிமன்றம், கூடைக்கணக்கிலே அவன் மீது குற்றங்களைக் கொட்டிக் கோப்பை நிறைய நஞ்சையும் நிறைத்துப் பருகடா இந்த உயிர் பருகும் பாயாசத்தை என்று உத்தரவிட்டிருக்கிறது!..... விஷக் கோப்பையின் விளிம்பிலே, உபதேசங்களை உதிர்த்த சாக்ரடீசின் உதடுகள் பதியப் போகின்றன! இன்னும் ஓரிரு விநாடிகள்! அதன் பிறகு சாக்ரடீசின் உடல், உயிர் எல்லாமே அதனதன் தொடர்பை அறுத்துக் கொண்டு, வாழ்க்கைத் தொடர்கதைக்கு முற்றுப் புள்ளி வைத்து விடும்! வருகிறேன் கிரேக்கமே!..... வருகிறேன்! எனதருமை ஏதென்ஸ் நகரமே, வருகிறேன்!..... நான் ஆடியோடி ஆவேசமாகப் பேசுவதற்குத் துணை புரிந்த ஏதென்சு நகரத்து எழில் வீதிகளே! வீதியோரத்து மர நிழல்களே! வீட்டோரத்து திண்ணைகளே! உங்கள் அனைவரிடமிருந்தும் இந்தக் கிழவன் விடைபெறுகிறான்! பீடுநடையும் பெருமித நோக்கும் கொண்ட இளைஞர்களே! நாடு காக்கும் நல்லதம்பிகளே! பேரன்பு கொண்டோரே! பெரியோரே! பெற்ற தாய்மாரே! நல்இளஞ்சிங்கங்காள்! உங்கள் அனைவருக்கும் சாக்ரடீசின் இறுதி வணக்கம் உரித்தாகுக! இந்தக் கிழவன் கிரேக்க இளைஞர்களைக் கெடுத்ததாக யாராவது உண்மையாக உளமார நினைத்தால் அவர்கள் என்னை மன்னித்து விடட்டும்! மன்னித்து விடட்டும்! வருகிறேன். வணக்கம், வணக்கம். சிந்திக்கத் தவறாதே! ஏ, ஜெகமே! சிந்திக்கத் தவறாதே! உன்னையே நீ அறிவாய்! அறிவாய்!

(சாக்ரடீஸ் விஷத்தைச் சாப்பிட்டு முடிக்கிறான். கால்கள் தடுமாறுகிற வரையில் நடக்கிறான். பிறகு படுக்கிறான். உடல் சில்லிட்டுப் போகிறது! காவலன், போர்வையை இழுத்துச் சாக்ரடீசின் முகத்தை மூடுகிறான், சில வினாடிகளுக்குப் பின், சாக்ரடீஸ் போர்வையை முகத்திலிருந்து விலக்கி)

**சாக்ரடீஸ்** :- கிரிட்டோ! ஒன்று சொல்ல மறந்தேன்..... பக்கத்து வீட்டு அங்கிளிப்பியசுக்கு ஒரு கோழிக் குஞ்சு கடன் கொடுக்க வேண்டும். அதை மறக்காமல் கொடுத்து விடு.....

(அத்துடன் கிரேக்கப் பெரியவரின் மூச்சு நின்றது. கிரிட்டோ அழுதான். சின்னாள் சென்று கிரேக்கம் அவன் கல்லறையைக் கண்ணீரால் குளிப்பாட்டியது)

உடன்பிறப்பே, இத்தகைய மாமேதையின் வாழ்க்கை வரலாற்றை இளைஞர் சமுதாயம் அறிந்து கொள்ள வேண்டியது முக்கியமல்லவா?

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 18.11.2007)



நாமக்கல் மாவட்டத்தில் 2023-2024 ஆம் கல்வி ஆண்டில் 5,206 மாணவர்களுக்கும், 5,904 மாணவிகளுக்கு 11,110 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கும் பணியினை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் துவக்கி வைத்து முதற்கட்டமாக பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 834 மாணவ, மாணவியர்களுக்கு வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், நகர்மன்ற தலைவர் கலாநிதி மற்றும் கழக நிர்வாகிகள், துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் பேரூராட்சியில் அம்ருதி 20 அபிவிருத்திப் பணிகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஜாஆனி மேரி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.சுகன் ஆகியோர் உள்ளனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் கிழக்கு ஒன்றியம் கொத்தமங்கலம் ஊராட்சி வைரம் செல்வராஜ் மாற்றுக் கட்சியிலிருந்து விலகி புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், தமிழக சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி முன்னிலையில் கழகத்தில் இணைத்துக்கொண்டார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ஞான.இளங்கோவன், அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.ராஜேந்திரன், சிவ.பால இளங்கோ, கருணாகரன், வழக்கறிஞர் வளர்மதி மற்றும் பலர் உள்ளனர்.

### கனமழை பெய்தபோதும் - மழை நின்ற பின்

# தண்ணீர் தேங்காத சூழலை ஏற்படுத்த திட்டமிட்டு செயலாற்றுகிறோம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, டிச.4-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேங்கியிருந்த தண்ணீரை வெளியேற்றும் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று இயல்பு நிலை திரும்பி வருகிறது. தண்ணீர் தேங்கியிருந்த பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த நீர் இறைப்பான் மோட்டார்களை அந்தந்த இடங்களிலேயே இந்த பருவமழை முடிகின்ற வரையில் தொடர்ந்து வைத்திருப்போம். கனமழை பெய்தாலும் கூட மழை நின்றபின், முழுவதுமாக தண்ணீரில்லாத ஒரு சூழலை ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டு, இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அளித்த பேட்டி வருமாறு:-

கன மழையினால் தண்ணீர் தேங்கியிருந்த பகுதிகளாக 27 இடங்கள் கண்டறியப்பட்டன. இப்பகுதியில் போர்க்கால அடிப்படையில் முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள சிறப்பு அலுவலராக திரு. கணேசன் ஐஏஎஸ் அவர்களையும், தலைமையிடத்திலிருந்து ஒரு கண்காணிப்பு பொறியாளர் மற்றும் இரண்டு செயற்பொறியாளர்களை கூடுதலாக நியமித்திருக்கின்றோம். கன மழை பெய்ததினால் தண்ணீர் தேக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அந்த பகுதி மக்களுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. தண்ணீர் தேங்கியிருந்த பகுதிகளில் முன்



னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்தையும் தயார் நிலையில் வைத்திருக்கின்றோம். வருகின்ற காலங்களில் அந்தப் பகுதிகளில் கூட மழை நீர் தேங்காத அளவிற்கு உரிய கட்டமைப்புகள் நிச்சயம் ஏற்படுத்தப்படும்.

நேற்றைய தினம் இதே பகுதியில் நாங்கள் ஆய்வுக்கு வந்தபோதும், மீண்டும் இன்று காலை ஆய்வு செய்தபோதும் செய்தியாளர்களாகிய நீங்களும் உடன் வந்தீர்கள். இப்பகுதி மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியோடு, முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொன்னார்கள் என்பதை நீங்களும் நேரடியாக பார்த்தீர்கள். முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் இந்த பகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் தான் இருப்பார்கள், அதற்குண்டான அனைத்து பணிகளையும் இந்த அரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் உறுதியாக செய்யும்.

மழைநீரோடு, கழிவு நீர் தேங்கிய பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் ஜெட்ராடிங் மெஷின், சூப்பர் சக்சன் போன்ற இயந்திரங்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. விரைவில் முழுமையாக கழிவுநீர் அகற்றுகின்ற பணிகளும் முடிவுக்கு வரும். பெரு மழை வருகின்ற போது எந்த ஆட்சியாக இருந்தாலும் தண்ணீர் தேங்கும். அப்படி தேங்குகின்ற தண்ணீரை உடனடியாக வெளியேற்றுவதுதான் அரசின் திறனாகும். அப்படி தேங்கிய தண்ணீரும் ஒரு நாளைக்குள் வெளியேற்றப்பட்டுள்ளது.

அதிமுக ஆட்சியில் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையில் சென்னையின் மழை நீர் கட்டமைப்புகளை மேம்படுவதற்காக ரூ. 6,400 கோடி செலவிட்டுள்ளதாக கொள்கை விளக்க குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். 2021 ஆம் ஆண்டு இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின் போது, சென்னையில் மழை நீர் கால்வாய்களை கட்டி விட்டோம், சிங்கப்பூர் போல் ஒரிடத்தில் கூட மழை நீர் தேங்காது என்று அறிவித்தார்.

2021 ஆம் ஆண்டு மே மாதம் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பெய்த பெரும் மழையில் பல இடங்களில் வாகனங்களே செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இன்றைக்கு அந்த நிலை இல்லை. அனைத்தும் முக்கிய வீதிகளும் முழுமையான பராமரிப்பிலே இருக்கின்றன. எங்குமே மழை நீர் நிற்கவில்லை. இவ்வளவு தொகை செலவு செய்ததன் விளைவாகத்தான் முக்கிய பகுதிகளில் எங்கும் தண்ணீர் தேங்க வில்லை.

கடந்த மழைக்காலங்களின் போது 100 அடி சாலை, ஜவகர் நகர், எஸ் ஆர்பி கோயில் தெரு, பல்லவன் சாலை, செல்வி நகர், செந்தில் நகர் போன்ற பகுதிகளில் இடுப்பளவு தண்ணீர் தேங்கி இருந்த நிலையிருந்தது. இந்த கட்டமைப்புகளை உருவாக்கியதன் பலனாகத்தான் இன்றைக்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட எங்கும் நிற்கவில்லை.

கடந்த காலங்களில் சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலகத்தில் கூட இடுப்பளவிற்கு தண்ணீர் தேங்கியிருந்த நிலை இருந்தது. தற்போது அங்கும் தண்ணீர் இல்லை. முக்கிய சாலைகளான பிரகாசம் சாலை, வால்டாக்ஸ் சாலை, ராஜாஜி சாலை போன்றவற்றிலும் தண்ணீர் இல்லை.

முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட கட்டமைப்புகளை உருவாக்கியதால் தான் எங்கும் தண்ணீர் தேங்கவில்லை. குறிப்பாக ஒன்றரை மணி நேரத்தில் 19 சென்டிமீட்டர் அளவிற்கு மழை பெய்ததினால் தான் தண்ணீர் தேங்கியது. அப்படி தேங்கிய தண்ணீரை வெளியேற்ற கால்வாய்கள் உடனுக்குடன் சுத்தம் செய்யப்பட்டு, எல்லா இடங்களிலும் தற்போது தேங்கிய தண்ணீர் அகற்றப்பட்டு விட்டது என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன். இதிலிருந்து தான் ஆட்சியின் திறன் வெளிப்படுகிறது.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

கொளத்தூர், பாலாஜி நகர் பகுதியில்

# மழைநீர் வெளியேற்றும் பணிகள் - மருத்துவ முகாம்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார்!

சென்னை, டிச. 4-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன்தினம் (02.12.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட பாலாஜி நகர் பிரதான சாலை, குமரன் நகர், திருப்பதி நகர், வளர்மதி நகர், நேர்மை நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வெளியேற்றும் பணிகள், மருத்துவ முகாம்கள், சாலைகளை தூய்மைப்படுத்துதல் மற்றும் உணவு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்பி.கே. சேகர்பாபு, நேற்று மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான அனைத்துத்துறை அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் அறிவுறுத்தியபடி, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் பணிகளை நேற்று ஆய்வு செய்தார்.

நோய்த் தொற்று ஏற்படாமல் பாதுகாத்திடும் வகையில் பாலாஜி நகரைச் சேர்ந்த நேர்மை நகரில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமினை பார்வையிட்ட பின், பாலாஜி நகர் பிரதான சாலை, குமரன் நகர், திருப்பதி நகர், வளர்மதி நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வெளியேற்றப்படும் பணிகளையும், சாலைகளை தூய்மைப்படுத்தும் பணிகளையும் பார்வையிட்டு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். அதனைத் தொடர்ந்து அக்பர் ஸ்கொயர் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவினை வழங்கினார்,

இந்த ஆய்வின் போது நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், மாநகராட்சி மத்திய மண்டல துணை ஆணையர் கே.ஜே.பிரவீன் குமார், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், ஐசிஎப் பா. முரளீதரன், ஏ.நாகராஜன், கே. சந்துரு, சி. மகேஷ்குமார், என்.டி. தமிழ்ச்செல்வன். என். ராமச்சந்திரன், முருகன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அமலாக்கத் துறையின் சாயம் வெளுத்து விட்டது!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிக்கை!

சென்னை, டிச. 4-

திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் டாக்டர் சுரேஷ் பாபு வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக, அமலாக்கத்துறை அவர் மீது 2018 இல் வழக்குப் பதிவு செய்திருந்தது. இந்த நிலையில், டாக்டர் சுரேஷ் பாபுவிடம் வழக்கில் இருந்து விடுதலை செய்வதாக ரூ.3 கோடி லஞ்சம் தருமாறு மதுரை அமலாக்கத்துறை அதிகாரியான அங்கித் திவாரி கூறியுள்ளார்.

திண்டுக்கல் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் அதிகாலை அமலாக்கத்துறையைச் சேர்ந்த அதிகாரி அங்கித் திவாரி 20 லட்சம் ரூபாய் பணத்தைப் பெற்றுள்ளார்.

இது குறித்து மருத்துவர் ஏற்கனவே அளித்த புகாரின் பேரில் தகவலறிந்து அங்கு வந்த திண்டுக்கல் மாவட்ட லஞ்ச ஒழிப்பு டி.எஸ்.பி. தலைமையிலான காவல் துறையினர் அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரியின் காரிலிருந்து 20 லட்சம் ரூபாய் லஞ்ச பணத்தைக் கைப்பற்றி, அவரையும் கைது செய்தனர்.

தமிழ்நாடு இலஞ்ச



ஒழிப்புத் துறை மிகத் திறமையாகச் செயல்பட்டு, கையும் மெய்யுமாக அங்கித் திவாரியை பிடித்தது பாராட்டுக்குரியதாகும்.

மதுரையில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் சோதனை நடத்தச் சென்றனர். ஆனால் அங்கு சோதனை நடத்த மறுக்கப்பட்டது. பின்னர் அங்கித் திவாரி அலுவலகத்தில் மட்டும் சோதனை நடத்த அனுமதிக்கப்பட்டது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு, தனது அரசியல் எதிரிகளை பழிவாங்க பயன்படுத்தும் கருவியான அமலாக்கத் துறையில் எந்த அளவுக்கு லஞ்சம் ஊழல் புரையோடிக் கிடக்கிறது என்பதற்கு அமலாக்கத்துறை அதிகாரியின் கைது வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

மாநில அரசின் அனுமதி இன்றி இந்த அமலாக்கத் துறையை தலைமைச் செயலகத்துக்குள் ஏவி விட்டு தி.மு.க. அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்த ஒன்றிய பா.ஜ.க. அரசு முனைந்தது.

தற்போது மதுரையில் அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு உள்ளே தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு காவல்துறை நுழைந்து சோதனை நடத்தி இருப்பது வரவேற்கத்தக்கது.

மதுரை மற்றும் சென்னை அமலாக்கத்துறை அலுவலகங்களில் உள்ள பல அதிகாரிகளுக்கும் இதில் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அமலாக்கத்துறை அலுவலகங்களிலும் தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு காவல் துறை விசாரணை நடத்த வேண்டும்.

இந்தியா முழுவதும் அமலாக்கத்துறையில் இதே போன்று லஞ்ச ஊழல் தலைவிரித்து ஆடுகிறது.

ராஜஸ்தான் மாநிலத்தில் கடந்த அக்டோபர் 30 ஆம் தேதி, 30க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தி இருந்தனர்.

அப்போது ஏலச் சீட்டு மோசடி விவகாரத்தில் குற்றவாளியைக் கைது செய்யாமல் இருக்க அமலாக்கத் துறை அதிகாரிகள் இரண்டு பேர் ரூ.17 லட்சம் லஞ்சம் கேட்டுள்ளனர். ஆனால் ரூ. 15 லட்சம்தான் கொடுக்க முடியும் என்று குற்றவாளி கூறியுள்ளார். இதனைத் தொடர்ந்து ரூ.15 லட்சம் பணத்தை வாங்கியபோது அமலாக்கத்துறை அதிகாரிகள் இரண்டு பேரையும் கையும் களவுமாக ராஜஸ்தான் லஞ்ச ஒழிப்புக் காவல் துறையினர் கைது செய்த நிகழ்வு நடைபெற்றிருந்தது.

தமிழ்நாடு, ராஜஸ்தான் மாநிலங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் லஞ்சம் வாங்கி பிடிபட்டதன் மூலம் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அரசியல் கருவியான அமலாக்கத்துறையின் சாயம் வெளுத்து விட்டது.

அமலாக்கத்துறை குறித்த நடவடிக்கைகள் வெளிப்படையாக மக்களுக்குத் தெரிய வேண்டும்.

அமலாக்கத் துறையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஒன்றிய பா.ஜ.க. அரசு நடத்திவரும் மிரட்டல் அரசியல் கடும் கண்டனத்துக்குரியது என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர்வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில், கலைஞர் நூற்றாண்டு விழா, திமுக பவள விழா மற்றும் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா ஆகிய முப்பெரும் விழாக்களை முன்னிட்டு, டி.என்.பாளையம் தி.மு.கழகத்தின் சார்பில் ஒன்றிய கழக செயலாளர் எம்.சிவபாலன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் முன்னிலையில் திராவிட மாடல் ஆட்சிக்கு பெறும் வழிகாட்டுவது கலைஞரின் கொள்கை வளமா! மக்கள் நலமா? என்ற தலைப்பில் திண்டுக்கல் ஐ_லியோனி நடுவராக பங்கேற்ற மாபெரும் பட்டிமன்றம் நடைபெற்றது. நிகழ்வில் வாணிப்புத்தூர் பேரூர் கழக செயலாளர் சேகர்(எ)பழனிச்சாமி, பேரூர் மன்றத் தலைவர் எம்.சிவராஜ் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர பேரூர், கிளை கழக செயலாளர்கள், பேரூர் மன்றத் தலைவர்கள், டி.என்பாளையம் ஒன்றிய கழக நிர்வாகிகள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், வார்டு குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (02.12.2023) தமிழ்நாடு முழுவதும் நடைபெறவுள்ள 2000 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட சிறப்பு முகாமினைத் தொடங்கி வைக்கும் விதமாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறவுள்ள 100 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட சிறப்பு முகாமினை இராயபுரம் மண்டலம், புதுமனைக் குப்பம், மாதா சர்ச் தெரு, புனித பீட்டர்ஸ் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி வைத்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர்கள் டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), தா.இளையஅருணா (நகரமைப்பு), பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மருத்துவர் டி. செல்வவிநாயகம், மாமன்ற உறுப்பினர் ரா. சுரேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.


கலைஞர்
100
1924-2023
சிவகங்கை மாவட்டம்
கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கவும்
இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும்
திராவிட கழகப்
போராளி
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வருக! வருக! என வரவேற்கிறோம்
கே.ஆர்.பெரியகருப்பன்
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
சிவகங்கை மாவட்டச் செயலாளர்
ஆ.தமிழரசி ரவிக்குமார் B.Com, MLA
முன்னாள் அமைச்சர், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர்
மாநில மகளிர் தொண்டரணி இணை செயலாளர்
TAMILARASIRAVIKUMAR_OFFCIAL
@TAMILARASIRAVI13
ஆ.தமிழரசிரவிக்குமார்
@tamilarasiravikumardmk1656


சிவகங்கை மாவட்டத்தில்
04.12.2023 திங்கள் அன்று
N.வைரவன் பட்டியில்
இளைஞர் அணி
செயல் வீரர்கள் கூட்டம்
ARASU ARTS
அன்று
நம் முதல்வர் தலைமையில்
உங்கள் தொகுதியில் ஸ்டாலின்
இன்று
நம் சின்னவர் தலைமையில்
செயல் வீரர்கள் கூட்டம்
சிவகங்கை பைபாஸ் சாலையில் கழக முன்னோடிகளுக்கு
பொற்கிழி மற்றும் அரளிக் கோட்டையில் கழகக் கொடி ஏற்றி வைக்க வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக. வருக..
மகிழ்வுடன் : கே.ஆர்.பெரியகருப்பன்
கூட்டுறவுத் துறை அமைச்சர் – மாவட்டக் கழகச் செயலாளர்
சிவகங்கை மாவட்ட தி.மு.க.


கலைஞர் 100
1924 - 2023
நாள் : 4.12.2023 திங்கட்கிழமை – இடம் : திண்டுக்கல்
மூத்தவர்களை வணங்கி
இளைஞர்களை வழி நடத்தி அனைவரையும் அரவணைக்கும்
திராவிட மாடலின் இனிய இளவலே!
திண்டுக்கல் மாவட்ட இளைஞரணி
செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
ARASU ARTS
வரவேற்று மகிழும்
இ.பெரியசாமி
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் – கழக துணைப் பொதுச்செயலாளர்
அர.சக்கரபாணி
உணவு (ம) உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்
திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர்
I.P. செந்தில்குமார்
பழனி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர்
திண்டுக்கல் மாவட்ட தி.மு.க.





நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர், இராசிபுரம், நாமகிரிப்பேட்டை ஆகிய பகுதிகளில் ரூ.1.28 கோடி மதிப்பிட்டில் 6 முடிவுற்ற பணிகளை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே.பி.இராமசுவாமி, கே.பி.ஜெகநாதன், ஆர்.எம்.துரைசாமி மற்றும் கழக நிர்வாகிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் 6 முடிவுற்ற பணிகள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி திறந்து வைத்தார்!

நாமக்கல்,டிச. 4 -

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், மதியம்பட்டி ஊராட்சி, சௌரிபாளையம், இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம், முத்துக்களிப் பட்டி ஊராட்சி, 85 ஆர். குமாரபாளையம் ஊராட்சி, சந்திரசேகரபுரம் ஊராட்சி, அக்ராஹாரம் மற்றும் நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கார்கூடல் பட்டி ஊராட்சி, ராஜபாளையம் ஆகிய பகுதிகளில் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் 6 முடிவுற்ற பணிகள் துவக்க விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், மதியம்பட்டி ஊராட்சி, சௌரிபாளையத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2021-2022ன் கீழ், ரூ.11.77 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாயவிலைக்கடை, இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம், முத்துக்களிப்பட்டி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II 2021-22ன் கீழ், ரூ.12.61 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள மையக் கட்டிடம், சந்திரசேகரபுரம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II 2021-22ன் கீழ், ரூ.12.61 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடம், 85.ஆர். கொமாரபாளையம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் 2022-2023ன் கீழ் ரூ.9.60 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள தொழிற்கூட கட்டிடம், 85.ஆர்.கொமாரபாளையம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II 2022-2023ன் கீழ், ரூ.10.91 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள வேளாண் விளைப் பொருள் வைப்பு கட்டிடம், மகளிர் சுய உதவிக்குழு கட்டடம்: நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கார்கூடல்பட்டி ஊராட்சி, ராஜபாளையத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், ரூ.70.25 லட்சம் மதிப்பீட்டில் 2,580 ச.அடி பரப்பளவில் புதியதாக கட்டப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக்குழு கட்டடம் உள்ளிட்டவற்றை இராஜேஸ்குமார் எம்.பி திறந்து வைத்தார். முன்னதாக வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், மதியம்பட்டி ஊராட்சியில் கூட்டுறவுத் துறையின் சார்பில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல் சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ், ரூ.36.20 லட்சம் மதிப்பீட்டில் போக்குவரத்து வாகனத்தினை இராஜேஸ்குமார் எம்.பி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி யில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே.பி.இராமசுவாமி, கே.பி.ஜெகநாதன், ஆர்.எம்.துரைசாமி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஏ. ஆர்.துரைசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் க.பா.அருளரசு, மாவட்ட வழங்கல் அலுவலர் த.முத்துராமலிங்கம், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மாற்றுத் திறனாளிகளுக்கான நிலையான நீடித்த இலக்குகளை அடைந்திட-

# மாற்றுத் திறனாளிகளின் நலனைப் பாதுகாக்க நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின வாழ்த்துச் செய்தி!

**சென்னை, டிச. 4-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் விடுத்த, சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின வாழ்த்துச் செய்தியில், "மாற்றுத்திறனாளிகளுக்கான நிலையான நீடித்த இலக்குகளை அடைந்திடவும், அவர்களின் நலனைப் பாதுகாக்கவும் நாம் ஒன்றிணைந்து செயல்படு வோம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின வாழ்த்துச்செய்தி வருமாறு:-

ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் டிசம்பர் மாதம், 3ஆம் நாள் அனைத்து நாடுகளிலும் அனுசரிக்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்கள் சுயமரியாதை யுடன் சமுதாயத்தில் இணைந்து வாழ நாம் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டிய அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

நமது அரசு, மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் முதல் நடவடிக்கையாக மாற்றுத்திறனாளிகளின் உடல் ரீதியான குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தடுக்கவும், சிறப்புக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வழங்கவும், மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் பிற நலத்திட்டங்களுக்காகவும் வழங்கப்படும் நிதியினை இந்த அரசு உயர்த்திக் கொண்டே வருகிறது. இதன்மூலம் மாற்றுத்திறனாளிகளின் சமூக, பொருளாதார வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

மாத பராமரிப்பு உதவித்தொகை ரூபாய்.2000/ என உயர்த்தி வழங்கியும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வாயிலாக மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கும் பல புதிய முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டும், மாற்றுத்திறனாளிகளுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

மேலும், சமுதாயத்தில் மாற்றுத்திறனாளிகள் முழு பங்கு வகிக்கும் வகையில் பொதுக் கட்டடங்களில் தடையற்ற சூழல் அமைத்தல், நவீன உதவி உபகரணங்கள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து மறுவாழ்வு உதவிகளும் மாற்றுத்திறனாளிகள் விருப்பத்திற்கு ஏற்றவாறு அவர்கள் வசிக்கும் இருப்பிடம் மற்றும் சமுதாயத்திலேயே கிடைக்கும் வகையில் கோட்ட அளவில் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அமைக்கும் பணியும் "உரிமைகள் திட்டம்" மூலம் செயல்படுத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக நமது தமிழ்நாடு அரசு, ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் உறுதி ஏற்றுள்ள, "எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும்", "சமுதாயத்தில் ஒருவரும் விடுபடக் கூடாது" ("LEAVE NO ONE BEHIND") போன்ற கொள்கைகளை பின்பற்றும் வகையில் செயல்பட்டு வருகிறது.

எனவே, இந்த நாளில் "மாற்றுத்திறனாளிகளுக்கான நிலையான நீடித்த இலக்குகளை அடைந்திடவும், அவர்களின் நலனைப் பாதுகாக்கவும் நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம்" என அனைவரும் ஒன்றிணைந்து உறுதி ஏற்போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கழக மகளிரணி சார்பில் மதுரை மண்டல அளவில் நடைபெற்ற வினாடி வினா போட்டியை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர். உடன் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்கள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு உள்ளிட்டோர் உள்ளனர்.

எதிர்வரும் கனமழையை எதிர்கொள்ள மின்துறையில்

# 13 ஆயிரம் களப்பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

சென்னை, டிச.4-

வள்ளுவர்கோட்டம் துணை மின் நிலையத்தில், மின் மாற்றி பழுது நீக்கும் பணியினை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள 110/11 கி. வோ. வள்ளுவர் கோட்டம் துணை மின் நிலையத்தில் உள்ள 16 எம்.வி.ஏ. உயரழுத்த மின்மாற்றியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பழுது நீக்கும் பணியிணை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் ஆய்வு செய்தார்.

முன்னதாக, நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் மற்றும் வங்கக்கடலில் உருவாகி உள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள மின்சாரத்துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் காணொலி காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) மா.இராமசந்திரன், இயக்குநர் (பகிர்மானம்) இரா.மணிவண்ணன், அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மின் பகிர்மான வட்ட



மேற்பார்வைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வு கூட்டத்தில் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, மழை, வெள்ள காலங்களில் மின் கசிவினால் ஏற்படும் விபத்துக்களை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

எதிர்வரும் கனமழையை எதிர்கொள்ள, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்படி, மின்சாரத்துறை எல்லாவிதமான நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தியதைப் போல் அசம்பாவிதங்கள் மற்றும் பேராபத்துக்கள் ஏதும் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அனைத்து மின்சார வாரிய அதிகாரிகளுக்கும் அறிவுரைகளை வழங்கி வருகிறோம். குறிப்பாக, இந்த புயல் காலத்தில் மக்களுக்கு சீரான மின்சாரம் எந்த இடத்திலும் தடைபடாமல் வழங்குவதற்கு வேண்டிய உத்தரவுகளை அதிகாரிகளுக்கு வழங்கியிருக்கிறோம்.

மேலும், மருத்துமனைகள், குடிநீர் வழங்கல் வசதி மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து தடையற்ற மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியுள்ளோம். அதே போல முதலமைச்சர் அவர்களின் அறிவுரையினை ஏற்று இங்கு இருக்கக் கூடிய மாநில பேரிடர் கட்டுப்பாட்டு மையத்தில் நம்முடைய மின்வாரிய துறையின் அலுவலர்கள் பணியாளர்கள் களப்பணியாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மாவட்டந்தோறும் இருக்கக்கூடிய கட்டுப்பாட்டு மையங்களில் மின்சார துறையின் பொறியாளர்கள் களப்பணியிலே இருக்கிறார்கள். அதே போல், அந்தந்த செயற்பொறியாளர்களின் கீழ் பணியாளர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு தேவையான இடங்களில் பணிகள் மேற்கொள்ள இப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கனமழை மிகப் பெரும் கனமழையாக இருந்தாலும் சரி, புயலாக நம்மைக் கடந்து சென்றாலும் அதனை எதிர்கொள்ள தமிழகம் முழுவதும் 3,00,000 மின் கம்பங்கள், 15,000 கி.மீ. மின் கம்பிகள் மற்றும் 15,000 களப்பணியாளர்கள் 24X7 தயார் நிலையில் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேவையான தளவாடப் பொருட்கள் எந்நேரமும் கையிருப்பில் உள்ளதை உறுதி செய்யவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல கடலோர மாவட்டங்களில் குறிப்பாக கனமழை எதிர்ப்பார்க்கும் திருவள்ளூர் அல்லது சென்னை போன்ற இடங்களில் இன்னும் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மணலி போன்ற பகுதிகளை ஒட்டியுள்ள பகுதிகளிலும், கடலோர பகுதிகளிலும் நம்முடைய மின் நிலையங்களிலும் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகம் முழுமைக்கும் தேவையான ஜே.சி.பி., கிரேன் போன்ற வாகனங்கள் மற்றும் மரம் வெட்டும் இயந்திரங்கள் போன்ற உபகரணங்கள் தேவைக்கேற்ப தயாராக வைக்கப்பட்டுள்ளது. பணியாளர்கள் தங்குவதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. எல்லா இடங்களிலும், எல்லா சூழ்நிலையிலும் இந்த மழைக் காலத்தை எதிர்கொண்டு பொதுமக்களுக்கு சீரான தடையற்ற மின்சாரம் வழங்குமாறு பார்த்துக் கொள்ளவும், அப்படியே ஏதாவது பழுது ஏற்பட்டாலும் அதனை உடனடியாக நீக்கி மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உதாரணமாக, இங்கே சென்னை, நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் 110 கி.வோ துணைமின் நிலையத்திலுள்ள உயரழுத்த மின்மாற்றியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உடனடியாக பழுது நீக்கி இயக்கத்திற்கு கொண்டு வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

எனவே, மின்வாரியத்தை பொருத்தமட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மின்வாரியம் தயாராக உள்ளது. இரவு நேரங்களில் குறிப்பாக மழைக் காலங்களில் ஏற்படும் மின்தடைக்கு புகார் அளிக்க மின்னகத்தில் ஒரே நேரத்தில் 65 அழைப்புகளை ஏற்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இதனை கண்காணிக்க தனியாக அலுவலர்களும் நியமிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சாலை ஓரங்களில் மழை நீர் தேங்கி மின் சாதனங்கள் ஏதேனும் பாதிக்கப்பட்டிருந்தாலோ அல்லது மின் கம்பி அறுந்து விழுந்திருந்தாலோ உடனடியாக 24 மணி நேரமும் செயல்படக்கூடிய மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்திற்கு 94987 94987 என்ற எண்ணிற்கோ அல்லது மின் தடை நீக்க மையத்திற்கோ தகவல் தெரிவிக்குமாறும், பொதுமக்கள் மழைகாலங்களில் மின் சாதனங்களை பயன்படுத்துவதில் கவனத்துடன் செயல்படுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு, அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.

மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுவிழா வினாடிவினா போட்டி!

# தமிழ்நாட்டின் வரலாறு, திராவிடப் பண்பாட்டை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டும்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

மதுரை, டிச.4-

தி.மு.க. மகளிர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி முன்னெடுப்பில் நடைபெறும் 'கலைஞர் 100 வினாடி வினா' மண்டல அளவிலான இரண்டாம் கட்டமாக மதுரை திருப்பரங்குன்றம் கோபால்சாமி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

'கலைஞர் 100 வினாடி வினா' போட்டியின் மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டியை திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி தலைமை வகித்து, போட்டியாளர்களை பாராட்டி சான்றிதழ் மற்றும் ஆறுதல் பரிசு வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு மதுரை வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருமான பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மதுரை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கலைஞர் 100 வினாடி வினா போட்டியில் கனிமொழி கருணாநிதி எம்.பி பேசியதாவது:

தமிழ்நாட்டின் வரலாறு, திராவிடப் பண்பாடு, கலைஞர் அவர்களின் ஆட்சி, திட்டங்கள் ஆகியவற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லவே இந்த போட்டி நடத்தப்படுகிறது. இரண்டு லட்சம் போட்டியாளர்களிலிருந்து மண்டல அளவிற்கு வெற்றிப்பெற்று வந்த அனைவருக்கும் பாராட்டுக்கள். அடுத்த ஆண்டு அல்லது அதற்கு அடுத்த ஆண்டில் மீண்டும் இதே போன்ற போட்டிகள் நடைபெறும், எனவே இந்த முறை வெற்றி பெறாதவர்கள் வருத்தமடைய வேண்டாம். அடுத்த ஆண்டுகளில் பங்கேற்று வெற்றி பெறலாம் என்றார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினருமான தமிழரசி ரவிக்குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்கள் வ. வேலுசாமி, பெ.குழந்தை வேலு மற்றும் கழக நிர்வாகிகள், மாணவ, மாணவியர் கழகத்தினர் உள்ளிட்ட பெரும் திரளானோர் பங்கேற்றனர்.

மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டியில், மதுரை மண்டலத்தில் (திண்டுக்கல், தேனி, மதுரை) ஆகிய மாவட்ட குழுக்கள் பங்கேற்றனர். 18 வயதிற்கு உட்பட்டோர் காணப் போட்டியில் மதுரை அணி வெற்றிபெற்றது, இந்த குழுவில் ஷஃபீக் மீன், சஞ்சய், நிதின் தங்கேஷ் ஆகியோர் பங்கேற்றனர். 18 வயதிற்கு மேற்பட்டோர் காணப் போட்டியில் மதுரை அணி வெற்றிபெற்றது, இந்த குழுவில் கதிர்வேல், தர்மராஜன், மூகாம்பிகா ஆகியோர் பங்கேற்றனர். இரு பிரிவிலும் மதுரை அணியே வெற்றி பெற்றது. இவர்கள் அரையிறுதி போட்டிக்கு முன்னேறினார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக மதிப்பெண்கள் பெறும் குழுக்கள் மண்டல சுற்றுக்கு முன்னேறுவார்கள். இது ஒரு குழு வினாடி வினா போட்டியாக இருக்கும், ஒரு குழுவில் மூன்று நபர்கள் பங்குபெறுவர். கலைஞர் 100 வினாடி வினா போட்டியின் மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டிகள், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி உள்ளடக்கிய 12 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, இரு பிரிவினருக்கும் தனித்தனியே நடைபெறும் இப்போட்டி மொத்தம் 5 சுற்றுகளாக நடைபெறும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக மதிப்பெண் எடுத்த ஒரு குழு என, 39 குழுக்கள் மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டியில் பங்குபெறுவர்.

அரையிறுதியின் வெற்றியாளர்கள் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவார்கள். இரு பிரிவுகளிலும் இறுதிச் சுற்றில் வெற்றிபெறும் அணிகளுக்கு தலா ரூ. 10 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்படும். இரு பிரிவுகளிலும் 2ஆம் இடத்தை பிடிக்கும் அணிகளுக்கு தலா ரூ.6 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்படும். இரு பிரிவுகளிலும் மூன்றாமிடம் பெறும் அணிகளுக்கு தலா ரூ.3 லட்சம் ரொக்கப் பரிசு அளிக்கப்படும். வெவ்வேறு சுற்றுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். இறுதிப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிசு வழங்குகிறார் என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

### சென்னையில் பலத்த காற்றுடன் கனமழை!

சென்னை, டிச.4 –

மிச்சாங் புயல் எதிரொலியால் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. இந்நிலையில், திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அடுத்த 3 மணி நேரத்தில் மழைக்கு வாய்ப்பு என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் எதிரொலியால் சென்னையில் பலத்த காற்றுடன் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. குறிப்பாக, சென்னை எம்.ஆர்.சி. நகர், பட்டினப்பாக்கம், மந்தைவெளி, மயிலாப்பூர், அடையாறு, திருவான்மியூர், எழும்பூர் மற்றும் புறநகர் பகுதிகளான தாம்பரம், பல்லாவரம் உள்ளிட்ட இடங்களில் உள்ளிட்ட பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் வட்டாரம், கொத்தக்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளியில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில் நடைபெற்ற கலைஞரின் வரும்முன் காப்போம் திட்ட மருத்துவ முகாமில், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்கு மருத்துவ காப்பீட்டுத்திட்ட அட்டைகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 02.12.2023 அன்று வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், இணை இயக்குநர் (சுகாதாரம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.எஸ்.ஸ்ரீபிரியா தேன்மொழி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (அறந்தாங்கி) மரு.எஸ்.நமச்சிவாயம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் அ.தி.மு.க., பா.ம.க. கட்சியினர் 20க்கும்மேற்பட்டோர் அக் கட்சியில் இருந்து விலகிசிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர்மொக்தியார் அலி மஸ்தான் உள்ளனர்.

## இந்திய ஒன்றிய அரசியலமைப்பையும் கூட்டாட்சித் தத்துவத்தையும் பாதுகாத்திட,

# சேலம் மாநாட்டில் ஒன்று கூடுவோம்!

## நீலகிரி மாவட்ட தி.மு.க இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

நீலகிரி, டிச. 4 -

**இந்திய ஒன்றிய அரசியலமைப்பையும் - கூட்டாட்சித் தத்துவத்தையும் பாதுகாத்திட, சேலம் மாநாட்டில் கழக இளைஞரணியினர் ஒன்று கூடுவோம் என்று, நீலகிரி மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞரணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சியுரையாற்றினார்.**




மாநில உரிமை மீட்பு முழக்கமாக, கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை வெற்றி மாநாடாக்கிடும் வகையில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில், தி.மு.க இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டார்.

நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.கழகத்தால் தொடங்கப்பட்டுள்ள, 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கத்திற்கு ஆதரவளித்து நீலகிரி மாவட்டத்தில் நீட்டுக்கு எதிராக பெறப்பட்ட 30 ஆயிரத்துக்கும் அதிகமான கையெழுத்துகளை கொண்ட அஞ்சல் அட்டைகளை, அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார். அவரது உரை வருமாறு:-

சேலத்தில் நடைபெற இருக்கக்கூடிய நம் கழகத்தின் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டிற்கு உங்களை எல்லாம் அழைப்பதற்காக இந்த நீலகிரி மாவட்டம் செயல்வீரர் கூட்டத்திற்கு நான் வருகை தந்திருக்கிறேன்.

இன்றைக்கு நீலகிரி மாவட்டத்தில் இவ்வளவு சிறப்பான செயல்வீரர் கூட்டத்தில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

இந்த நீலகிரி மாவட்டம் மலைகள், வனங்கள், ஆறுகள், விலங்குகள் நிரம்பிய மாவட்டம். பொதுவாக, எல்லோரும் மற்ற மாவட்ட நிர்வாகிகளைப் பார்க்கும் பொழுது, கழகத்தினரைப் பார்க்கும் போது இளைஞர் அணி தம்பிமார்களைப் பார்க்கும் பொழுது அனைவரும் ``ஊட்டிக்கு வாங்க, வந்து ரெண்டு நாள் தங்கி விட்டுப் போங்கள்" என்று கூப்பிடுவார்கள்.

### சேலத்திற்கு வாருங்கள்!

ஆனால், இன்று வித்தியாசமாக நான் ஊட்டிக்கு வந்து உங்களையெல்லாம் ``சேலத்திற்கு வாருங்கள், இளைஞர் அணி மாநாட்டில் கலந்து கொள்ள வாருங்கள். அந்த மாநாட்டை வெற்றிப் பெறச் செய்யுங்கள்" என்று உங்களை எல்லாம் அழைக்க நான் வந்து இருக்கிறேன்.

1967ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அமைச்சராகப் பொறுப்பேற்று, கலைஞர் அவர்கள் இந்திய ஒன்றியத்திற்கே முதன்முறையாகப் பேருந்துகளை அரசுடமையாக்கினார்கள். நாட்டுடைமையாக்கினார்கள்.

அப்படி நாட்டுடமை ஆக்கப்பட்டபொழுது அந்த முதல் பேருந்து இயக்கப்பட்டது இந்த நீலகிரி மாவட்டத்தில்தான்.

அப்படிப்பட்ட பெருமை மிகுந்த மாவட்டம் இந்த நீலகிரி மாவட்டம். இந்த நீலகிரி மாவட்டத்திற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் நம்முடைய தலைவர் அவர்களும் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் சிலவற்றை மட்டும் இங்கு கோடிட்டு காட்ட நான் விரும்புகின்றேன்.

### உதகையை புதுப் பொலிவாக்கியவர் கலைஞர்!

உதகமண்டலத்தை 1970ஆம் ஆண்டு புதுப் பொழிவுடன் புதுப்பித்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதேபோல் உதகையில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில், விருந்தினர் மாளிகை கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்ததும், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

இலங்கையில் உள்நாட்டுப் போர் மூண்ட போது, அங்கிருந்து திரும்பியவர்கள் பெரும்பாலும் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்தவர்கள். அங்கிருந்து 1970 ஆம் ஆண்டு கூடலூர், பந்தலூர், கோத்தகிரி பகுதிகளில் அவர்கள் குடியிருக்க வீடு கட்டி கொடுத்தவர், நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அது மட்டுமல்ல, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தைத் தோற்றுவித்தரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். இளம் வணிகர் நலச்சங்க கட்டடத்தை இலவசமாகக் கட்டி தந்த பெருமையைச் சேர்ந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

ஊட்டியில் பெரும்பான்மையாக வாழும் படகர் சமூகத்தில் உறுப்பினராக இருக்கக்கூடியவர்களை, பிற்படுத்தப்பட்டோர் பிரிவிலிருந்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்தவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். இப்படிப்பட்ட பல பெருமைகளைக் கொண்டது இந்த நீலகிரி மாவட்டம்.

இந்த முறை வருகை தருவது என்னுடைய வாழ்நாளில் மறக்கமுடியாத ஒரு பயணம், மறக்க முடியாத ஒரு கூட்டம். கழகத்தின் அடிப்படை உறுப்பினராக வந்திருக்கின்றேன், இளைஞர் அணி செயலாளராக வந்திருக்கின்றேன், பல முறை சட்டமன்றத் தேர்தலுக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் பிரச்சாரத்திற்கு வந்திருக்கின்றேன்.

ஆனால், முதன்முறையாக அமைச்சர் பொறுப்பேற்று உங்களை யெல்லாம் சந்திப்பதற்கு உங்களுடைய வாழ்த்துக்களைப் பெறுவதற்கு நான் இன்று வந்திருக்கின்றேன்.

### பிரமாண்டமான அரங்கம்!

இன்னொரு மிகப்பெரிய பெருமை, இந்தக் கூட்டத்திற்கு அண்ணன் முபாரக் சொன்னார்கள். இந்த நீலகிரியில் பல கூட்டங்கள் நடந்தி ருக்கின்றன. ஆனால், முதன்முறையாக ஒரு இயக்கத்திற்காக இப்படி ஒரு பிரம்மாண்டமான அரங்கை அமைத்து, இப்படி ஆயிரக் கணக்கான இளைஞர்களைக் கூட்டி, ஒரு கூட்டம் நடந்தது என்றால், அது இந்தக் கூட்டம்தான் என்று அண்ணன் முபாரக் அவர்கள் சொன்னார்கள்.

அண்ணன் முபாரக் அவர்கள் பேசும்பொழுது, மாநாட்டு நிதியாக ஒரு கோடி ரூபாய் கொடுப்பதாக இங்கு அறிவித்திருக்கின்றார். அவர் மட்டுமல்ல, நம்முடைய இளைஞர் அணி அமைப்பாளர் அவர்களும் தனியாக 10 லட்சம் ரூபாய் மாநாட்டு நிதி கொடுத்திருக்கிறார்.

இளைஞர் அணி துணை அமைப்பாளர்களும் சேர்த்து 12 லட்சம் ரூபாய் நிதி கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு விஷயம் சொன்னார்கள், `இது மிகவும் குறைவான நிதி' என்று. கிடையவே கிடையாது இது சின்ன மாவட்டமாக இருந்தாலும், நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய நிதி கிட்டத்தட்ட ஒன்றே கால் கோடி ரூபாய் என்பது மிகப் பெரிய அளவிலான நிதி.

`அன்பகம்', இளைஞர் அணியின் தலைமை அலுவலகம் சென்னையில் அதைத் தலைவர் அவர்கள் இளைஞர் அணி செயலாளராக இருக்கும் பொழுது அவரும் நம்முடைய தலைவர் அவர்களும் அப்பொழுது இருந்த இளைஞர் அணி செயலாளர்களும் மாவட்டம் மாவட்டமாக வசூல் செய்து அந்த அன்பகத்தைப் பெற்று இன்று இளைஞர் அணிக்கு ஒப்படைத்திருக்கிறார்கள். அதற்கும் இந்த நேரத்தில் சேர்த்து நன்றி சொல்ல வேண்டும்.

இளைஞர் அணிக்கு அன்பகம் என்று சென்னையில் ஒரு கம்பீரமான அலுவலகம் இருக்கிறது என்றால், அதற்கு மிக முக்கியமான காரணம் அண்ணன் முபாரக் அவர்க ளும் ஒரு காரணம். அதற்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### கழகத்திற்கு உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

கடந்த இரண்டு மாதங்களாக மாநாட்டை அறிவித்துவிட்டுத் தொடர்ந்து மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களுக்குப் பயணம் மேற்கொள்ளும் பொழுது இன்னொரு நிகழ்ச்சி நடத்துவோம். கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு, கழகத்திற்காக இரத்தம் சிந்திய வியர்வை சிந்திய மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சி. கிட்டத்தட்ட இதுவரை கழகத்தின் 40 மாவட்டங்களில் 44 கோடி ரூபாய் அளவில் கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கும் பொற்கிழி வழங்கியிருக்கின்றோம்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் எந்த இயக்கமும் செய்யாததை நம்முடைய தி.மு.கழகம் செய்திருக்கிறது. அது இந்த நீலகிரி மாவட்டத்தில் அண்ணனிடம் நான் வேண்டுகோளாக வைத்திருந்தேன்.

இந்த இளைஞர் அணி செயல்வீரர் கூட்டத்தை முடித்துவிட்டு, மாலை கோயம்புத்தூர் அடுத்த நான்கு நாட்கள் பல்வேறு மாவட்டங்களுக்குச் செல்ல இருக்கின்றேன். மீண்டும் நான் கண்டிப்பாக வருகின்றேன். கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு நான் செய்ய வேண்டிய கடமையைக் கண்டிப்பாகச் செய்வேன். அதையும் எனக்கு ஞாபகப்படுத்தி இருக்கிறார்.

மாநாட்டை முடித்துவிட்டு, ஜனவரி மாதம் அல்லது பிப்ரவரி மாதம் கண்டிப்பாக மீண்டும், இதே ஊட்டிக்கு வந்து இளைஞர் அணி தம்பிமார்கள் முன்னிலையில், கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழியை வழங்குகின்ற நிகழ்ச்சியை நீங்கள் நடத்துவீர்கள். கண்டிப்பாக நான் வருகிறேன். அது என்னுடைய கடமை.

நம் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் நடைபெற இருக்கிறது. நாம் இங்கே அதற்காகக் கூடி இருக்கிறோம்.

இந்த இளைஞர் அணிக்கு பல்வேறு பெருமைகள் இருக்கின்றன. இளைஞர் அணி தம்பிமார்கள் நீங்கள் எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும். இளைஞர் அணி உறுப்பினர்களாக இருக்கிறீர்கள். நம்முடைய இளைஞர் அணிக்கு என்னென்ன பெருமைகள் இருக்கின்றன, என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் வரலாற்றை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைக்கு இந்தியாவில் பல்வேறு இயக்கங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் பல்வேறு இயக்கங்கள் இருக்கின்றன. பல்வேறு இயக்கங்களிலும் அணிகள் இருக்கின்றன. இளைஞர் அணி இருக்கிறது. ஆனால், நம்முடைய திமுக இளைஞர் அணிக்கு ஒரு வரலாறு இருக்கிறது. அந்த வரலாறு என்னவென்றால், இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு இயக்கத்திற்கு 1980ஆம் ஆண்டு இளைஞர் அணி என்று ஒன்று துவங்கப் பட்டது என்றால், அது திராவிட முன்னேற்ற கழகம்தான். அதைத் தொடங்கியது நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

**இன்றைக்கு இந்தியாவில் பல்வேறு இயக்கங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் பல்வேறு இயக்கங்கள் இருக்கின்றன. பல்வேறு இயக்கங்களிலும் அணிகள் இருக்கின்றன. இளைஞர் அணி இருக்கிறது. ஆனால், நம்முடைய தி.மு.க. இளைஞர் அணிக்கு ஒரு வரலாறு இருக்கிறது. அந்த வரலாறு என்னவென்றால், இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு இயக்கத்திற்கு 1980ஆம் ஆண்டு இளைஞர் அணி என்று ஒன்று துவங்கப்பட்டது என்றால், அது திராவிட முன்னேற்ற கழகம்தான். அதைத் தொடங்கியது நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.**

நம்முடைய திமுக இளைஞரணிக்கு இன்னொரு பெருமை இருக்கிறது. நம்முடைய அண்ணன் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ஆ.ராசா அவர்கள் சொன்னார்கள் இல்லையா, எத்தனையோ அணிகள் இருக்கின்றன. கலைஞர் பலமுறை பாராட்டி இருக்கிறார். நம்முடைய தலைவர் அவர்களைப் பாராட்டி இருக்கிறார்கள். தி.மு.க.வில் கிட்டத்தட்ட 23 அணிகள் இருக்கின்றன. அந்த 23 அணிகளில் முதன்மை யான அணி எதுவென்றால், அது நம் இளைஞர் அணி என்று கலைஞரும் பாராட்டிருக்கிறார். நம்முடைய தலைவர் அவர்களும் பாராட்டி இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட பெருமையுடைய இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு, முதல் மாநில மாநாட்டின்போது முத்தமிழறிஞர் கலைஞர் தலைவராக இருந்தார்.

நம்முடைய தலைவர் இப்பொழுது இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள், அப்பொழுது இளைஞர் அணி செயலாளராக இருந்தார். முதல் மாநாடு நெல்லையில் 2007ஆம் ஆண்டு நடைபெற்றது. இப்பொழுது இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் நடைபெற இருக்கின்றது. இது மிகப்பெரிய ஒரு பெருமை.

### தலைவர் கொடுத்திருக்கும் மிகப் பெரிய பொறுப்பு!

பொதுவாக, எல்லோரும் தேர்தல் வருவதற்கு முன், ஒவ்வொரு இயக்கமும் மாநாடு நடத்தும். ஆனால், அந்த இயக்கம்தான் நடக்கும். அணிகளுக்கு அந்தப் பொறுப்பைக் கொடுக்கமாட்டார்கள். ஆனால், முதன்முறையாக `2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது, அதற்கு முன்னோட்டமாக ஒரு மிகப்பெரிய மாநாடு நடத்திக் காட்டுங்கள்' என்று நம்முடைய தலைவர் இளைஞர் அணிக்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்து இருக்கிறார் என்றால், நம்முடைய தலைவர் அவர்கள், என் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை மட்டும் கிடையாது. உங்கள் ஒவ்வொருவர் மீதும் வைத்திருக்கிற நம்பிக்கையால்தான் தலைவர் அவர்கள் இந்தப் பொறுப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அதை நிரூபித்துக் காட்ட வேண்டும்.

அதை நிரூபித்துக் காட்ட வேண்டுமென்றால், இளைஞர் அணி செயல்வீரர் கூட்டத்திற்கு, நான் உங்களை எல்லாம் மாநாட்டுக்கு அழைப்பதற்காக வந்திருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டுதான் வந்தேன். ஆனால், இங்கு வந்த பிறகுதான் உங்களுடைய எழுச்சியைப் பார்க்கும் போதுதான் தெரிகிறது.

என்னைவிட அதிக ஆர்வமாக நீங்கள்தான் அந்த மாநாட்டில் கலந்துகொள்ள ஆர்வமாக இருக்கிறீர்கள் என்று தெரிகிறது. எனவே, தலைவர் அவர்களின் நம்பிக்கையை நீங்கள் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

### ஒட்டுமொத்த தமிழ்நாடே கலைஞர் குடும்பம்தான்!

மோடி அவர்கள் சொல்கிறார், `தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் வாழ்வது, ஒரே ஒரு குடும்பம்தான். அது கலைஞருடைய குடும்பம்தான்' என்று சொல்கிறார். இந்த ஒட்டுமொத்த தமிழ்நாடுமே கலைஞரின் குடும்பம்தான்.

இங்கே இருக்கக்கூடிய நீங்கள் ஒவ்வொருவரும் கலைஞரின் வாரிசு, கலைஞருடைய பேரன்கள் பெரியாருடைய பேரன்கள், பேரறிஞர் அண்ணாவின் பேரன்கள், ஏதோ கூடி கைதட்டி, பேசி விட்டு கலைகின்ற கூட்டமாக இருக்கக் கூடாது, நம் இயக்கத்தின் கொள்கைகளைப் பேசக்கூடிய இயக்கமாக இருக்க வேண்டும்.

நீங்கள் ஒவ்வொருவரும் கொள்கை வீரர்களாக இருக்க வேண்டும். இந்தக் கூட்டத்திற்குப் பெயர் செயல் வீரர் கூட்டம். செயல்வீரர் என்று ஏன் பெயர் வைத்திருக்கிறோம்/ செயல் வீரர் என்றால் யார் தலைமை என்ன சொல்கிறதோ தலைவர் என்ன கட்டளை இடுகிறாரோ அதைக் களத்தில் இறங்கி செய்து முடிப்பவன்தான் உண்மை யான செயல் வீரன்.

தன்னலம் பார்க்காமல் சுயநலம் பார்க்காமல் மக்கள் நலன், கழகத்தின் நலன் தலைவர் என்ன சொல்கிறாரோ அது போராட்டமோ, ஆர்ப்பாட்டமோ, உண்ணாவிரதமோ என்ன நிகழ்ச்சியாக இருந்தாலும், அதைச் சிறப்பாகச் செய்து முடிப்பவன்தான் உண்மையான செயல்வீரன்.

அப்படிப் பார்த்தால், இந்த மாவட்டத்தில் உண்மையான செயல் வீரன் யார் முதல் செயல்வீரன் நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் முபாரக், அண்ணனுக்குத் துணை நிற்கும் இன்னொரு செயல் வீரர் யார் என்றால், நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ஆ. ராசா அவர்கள்,

கழகத்திலே இருக்கக்கூடிய முதல் செயல்வீரன், அண்ணன் ராமச்சந்திரன், களத்தில் நிற்கக் கூடிய முதல் செயல்வீரன். இங்கே இருக்கக்கூடிய அமைப்பாளர்கள் அத்தனை பேரும் உண்மையான செயல்வீரர்கள். இன்னும் சொல்லப்போனால், இந்த நிகழ்ச்சியில் இவ்வளவு எழுச்சியுடன், உறுதியுடன் கலந்து கொண்டிருக்கிறீர்களே நீங்கள் ஒவ்வொருவரும் உண்மையான செயல் வீரர்கள்.

அதனால்தான் இந்தக் கூட்டத்தி ற்குப் பெயர் செயல் வீரர் கூட்டம். இளைஞர் அணி செயலாளராகத் தலைவர் அவர்கள் எனக்கு இந்தப் பொறுப்பைக் கொடுத்து, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, தலைவர் அவர்கள் எனக்கு இலக்கு கொடுத்தார்கள். தொகுதிக்கு பத்தாயிரம் பேரை சேர்க்க வேண்டும் நீ என்று. அப்பொழுது மிகப்பெரிய ஒரு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டேன். அப்போது, இரண்டாவது கட்டமாகத் தொடங்கிய இடம் என்றால் அது இந்த நீலகிரியில் தான் தொடங்கினேன்.

இப்பொழுது நம்முடைய தலைவர், முதலமைச்சர் அவர்கள் அவருடைய உழைப்பு உங்களுக்குத் தெரியும். தன்னுடைய 14 வயதில் இளைஞர் மன்றம் கோபாலபுரத்தில் தொடங்கினார்.

1967ஆம் ஆண்டு. 1968ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சித் தேர்தலுக்காக சைக்கிள் பிரச்சாரம் சென்னை முழுவதும் தன்னுடைய 14 வது வயதில் தி.மு.க.விற்காக பிரச்சாரத்தை மேற்கொண்டார், அதேபோல 1969ஆம் ஆண்டு சென்னை மாவட்டத்தின் பிரதிநிதி, 1973ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர், 1976 ஆம் ஆண்டு மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு கடுங்காவல் தண்டனை, 1980ஆம் ஆண்டு இளைஞர் அணி ஆரம்பிக்கப்பட்டபோது ஏழு அமைப்பாளர்களில் ஒருவர்.

அதன் பிறகு தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் மேற்கொண்டு கொடியேற்றி, 1989ஆம் ஆண்டில் தி.மு.க.வின் மாநில இளைஞரணி செயலாளர், அதன் பிறகு 2006ஆம் ஆண்டு உள்ளாட்சித் துறை அமைச்சர், 2008ஆம் ஆண்டுக் கழகப் பொருளாளர், 2009ஆம் ஆண்டு துணை முதலமைச்சர், 2016ஆம் ஆண்டு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், 2017ஆம் ஆண்டு கழகத்தின் செயல் தலைவர்,

2018ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் மறைவுக்குப் பிறகு கழகத்தின் தலைவர், அதன்பிறகு 2021 ஆம் ஆண்டு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டின் முதலமைச்சர்.

இப்படி தன்னுடைய உழைப்பால் உயர்ந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். யாருடைய காலைப் பிடித்தும் முதலமைச்சர் ஆனவர் கிடையாது. நம்முடைய தலைவர் அவர்கள். நான் யாரை சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும்.

அப்படிப்பட்ட பெருமையைப் பெற்றது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம். நம்முடைய மாநாட்டில் நீங்கள் அத்தனை பேரும் கலந்து கொண்டு ஒரு வெற்றி மாநாடாக மாற்றிக் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

இன்றைக்கு நம்முடைய இளைஞர் அணி தம்பிமார்கள் நம்முடைய மாநாட்டிற்கு வரும் பொழுது நமது இயக்கத்தின் வரலாறு மற்றும் நம் இயக்கத்தின் தலைவர்கள் வரலாறு எல்லாம் உங்களுக்குச் சொல்லப்படும்.

### அடிமைகளை ஓட ஓட விரட்டி அடிப்போம்!

நம்முடைய இந்த மூன்றாண்டு கால ஆட்சி சாதனைகள் உங்களுக்கு விளக்கப்படும். 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் எப்படி அடிமைகளை ஓட, ஓட விரட்டி அடித்தோமோ, இப்போது நமக்கு இன்னொரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

2024 ஆம் ஆண்டு அடிமைகளின் எஜமானர்களையும் ஓட, ஓட விரட்டி அடிக்க வேண்டும். அதற்கான துருப்புச் சீட்டு, அதற்கான சாவி உங்கள் கையில் தான் இருக்கின்றது. இந்திய ஒன்றிய அரசியலமைப்பையும் கூட்டாட்சித் தத்துவத்தையும் பாதுகாத்திட, சேலம் மாநாட்டில் ஒன்று கூடுவோம்!

எனவே இளைஞர் அணி தம்பிமார்கள் நீங்கள் அத்தனை பேரும் நீங்கள் எப்படி இந்த நிகழ்ச்சிக்கு எழுச்சியோடு வந்திருக்கிறார்களோ அதே போலச் சேலம் மாநாட்டிற்கு நீங்கள் வந்து உங்கள் குடும்பத்தோட வந்து உங்கள் நண்பர்களுடன் வந்து ஒரு மிகப்பெரிய எழுச்சி மாநாடாக இதுவரை தமிழ்நாடு வரலாற்றில் இந்திய வரலாற்றில் இப்படி ஒரு சிறப்பான எழுச்சியான மாநாடு நடந்ததில்லை என்பதை நீங்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

நீங்கள் நிரூபித்துக் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

எனவே உங்கள் அத்தனை பேருக்கும் நன்றி. மீண்டும் உங்கள் அனைவரையும் சேலத்தில் சந்திக்கிறேன். சேலம் மாநாட்டை ஒரு மிகப்பெரிய வெற்றி மாநாடாக மாற்றிக் காட்டுவோம் என்று கூறி,

வாய்ப்பளித்த நம்முடைய மாவட்ட கழகச் செயலாளர் அண்ணன் முபாரக் அவர்களுக்கும், அண்ணன் ஆ.ராசா அவர்களுக்கும், அண்ணன் ராமச்சந்திரன் அவர்களுக்கும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருக்கக்கூடிய இளைஞர் அணி தம்பிமார்கள் உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியையும், வாழ்த்து களையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2023) திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் 91–வது பிறந்தநாளையொட்டி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவருக்கு பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ், ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் மனைவி திருமதி வீ. மோகனா அம்மையார் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

## நீட் விலக்குக் கோரி

# 55 லட்சம் கையெழுத்து!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்



சென்னை, டிச.4-

நீட் விலக்கை வலியுறுத்தி, தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது.

50 லட்சம் கையெழுத்துக்களைப் பெற வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், இதுவரை 55 லட்சம் கையெழுத்துக்கள் பெறப்பட்டுள்ளதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்த கையெழுத்து நீட் விலக்குப் பெறுவதற்கு அடித்தளமாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (02.12.2023) முகாம் அலுவலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து, வாழ்த்து பெற்றார்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி கழக இளைஞரணி 2 வது மாநில மாநாடு நடைபெறும் பணிகளை அமைச்சர் முத்துசாமி, கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் பார்வையிட்டனர். அதுபோது கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜோயல், சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, பேரூர் செயலாளர்கள் பாபு (எ) வெங்கடேஷ்வரன், வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## அதிகாரிகளுக்கும் நிறுவனங்களுக்கும் கொடுக்கப்படும்

# எல்லை மீறிய அதிகாரங்கள் அழிவைத் தரும்!

### ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி கருத்து!

**சென்னை, டிச.4-**

**“அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் எல்லை மீறிய அதிகாரங்கள் அந்த நிறுவனங்களையே அழித்துவிடும்” என்று மதுரையில் அமலாக்கத்துறை அதிகாரி லஞ்ச வழக்கில் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்.அதிகாரி அனில்ஸ்வரப் தமது ட்விட்டர் பதிவில் கருத்து தெரிவித்துள்ளார்.**

ஒன்றிய அரசின் மதுரை அமலாக்கத் துறை அலுவலகத்தில் அலுவலராகப் (Enforcement Officer) பணி புரிந்து வரும் அங்கித் திவாரி (Ankit Tiwari) என்பவர் கடந்த 29.10.2023 அன்று திண்டுக்கல்லைச் சேர்ந்த அரசு ஊழியர் ஒருவரை தொடர்பு கொண்டு அவர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரால் பதிவு செய்யப்பட்டு முடிந்து போன வழக்கை சுட்டிக்காட்டி, அவ்வழக்கில் அமலாக்கத் துறை விசாரணை நடத்த வேண்டுமென பிரதமர் அலுவலகத்திலிருந்து உத்தரவு வந்துள்ளதாகவும். 30.10.2023 அன்று மதுரை அமலாக்கத் துறை அலுவலகத்திற்கு விசாரணைக்கு வரவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**வாட்ஸ்அப் – குறுஞ்செய்திகள் மூலம் மிரட்டல்!**

அதன்படி, அந்த அரசு ஊழியர் மதுரைக்குச் சென்றபோது. அங்கித் திவாரி. அரசு ஊழியரின் காரிலேயே ஏறிக் கொண்டு நடவடிக்கை எடுக்காமல் இருக்க ரூ.3 கோடி தரவேண்டும் என்றும், பின்னர் தனது உயரதிகாரிகளோடு பேசுவதாகத் தெரிவித்துவிட்டு இறுதியாக ரூ.51 லட்சம் தரவேண்டும் என்றும் பேரம் பேசி உள்ளார்.

கடந்த 01.11.2023 அன்று அரசு ஊழியர் முதல் தவணையாக ரூ.20 லட்சம் பணத்தை அவரிடம் வழங்கி உள்ளார். பின்னர், மேல் அதிகாரிகளுக்கும் பங்கு தர வேண்டி உள்ளதால் பேசியபடி முழுத்தொகையான ரூ.51 லட்சத்தையும் தரவேண்டும் என்றும். இல்லையென்றால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் தொடர்ந்து வாட்ஸ்அப் மூலமும், குறுஞ்செய்திகள் மூலமும் மிரட்டியுள்ளார்.

இவரது நடவடிக்கைகளில் சந்தேகமடைந்த அந்த அரசு ஊழியர் 30.11.2023 அன்று திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் புகார் அளித்தார்.

முதற்கட்ட விசாரணையில் அங்கித் திவாரி அமலாக்கத் துறை அதிகாரி என்றும், தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி அரசு ஊழியரை மிரட்டி பணம் வசூலித்துள்ளார் என்றும் தெரிய வந்ததால் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு இரண்டாவது தவணையாக 01.12.2023 அன்று காலை 10.30 மணியளவில் ரூ.20 லட்சம் லஞ்சப்பணத்தைப் பெற்றுக் கொண்டபோது அவர் கையும், களவுமாகப் பிடிபட்டார்.

**சோதனையின்போது முக்கிய ஆவணங்கள் சிக்கின!**

அதனைத் தொடர்ந்து அங்கித் திவாரியின் வீடு மற்றும் மதுரையில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகம் ஆகியவற்றில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இச்சோதனையின்போது இவருக்குத் தொடர்புடைய பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

மேலும் இவர் அமலாக்கத்துறையின் பெயரில் எவரேனும் மிரட்டியோ அல்லது அச்சுறுத்தியோ இதேபோன்ற யுக்தியைப் பயன்படுத்தி கோடிக்கணக்கில் பணம் பெற்றுள்ளாரா என்ற கோணத்திலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த குற்ற நிகழ்வில் பிற அமலாக்கத் துறை அலுவலர்களுக்குத் தொடர்புள்ளதா என்பது குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த வழக்கு விசாரணையின் தொடர்ச்சியாக அங்கித் திவாரிக்கு தொடர்புடைய இதர இடங்களிலும் சோதனைகள் மேற்கொள்ள லஞ்ச ஒழிப்புத்துறை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுகுறித்து ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அனில்ஸ்வரப் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது:-

நிறுவனங்களுக்கும் அதிகாரிகளுக்கும் கொடுக்கப்படும் எல்லை மீறிய அதிகாரங்கள் அந்த நிறுவனங்களையே அழித்து விடும்.

நிறுவனங்களை அரசியல் ரீதியாக பழிதீர்க்க பயன்படுத்தும் போது அது நிலைமையை இன்னும் மோசமாக்கும். இந்த நிலைமை கைவிட்டுப் போவதற்குள் சம்பந்தப்பட்டவர்கள் இதுகுறித்து தீவிரமாக ஆலோசிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம் திப்பிராஜபுரம் ஊராட்சியில் பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாட்டு கடன் உதவித் தொகைக்கான ஆணையினை பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் 01.12.2023 அன்று வழங்கினார். அருகில் மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராமலிங்கம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.உஷா புண்ணியமூர்த்தி, கும்பகோணம் மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.




# திராவிட மாடல் அரசு 45

**'மு**த்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.










## 'மதி'ப்புறும் சமூகம்!

**செ**ன்னை வள்ளுவர் கோட்டத்துக்கு அருகில் இருக்கிறது, **அன்னை தெரசா மகளிர் வளாகம்.** 1989-ஆம் ஆண்டு முதன்முதலாக தர்மபுரி மாவட்டத்தில் **'மகளிர் சுய உதவிக் குழு'** தொடங்கப்பட்டது. பெண்களின் உழைப்புக்கும் பொருளாதாரத்துக்கும் ஓர் அங்கீகாரத்தைத் தந்தது அந்தத் திட்டம். பிறகு 2010- ஆம் ஆண்டில் அன்னை தெரசாவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும்விதமாக, 'அன்னை தெரசா மகளிர் வளாகம்' அமைக்கப்பட்டது. மாநிலம் முழுக்க உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களை ஒருங்கிணைக்கவும், அந்தக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தவும், அந்த வளாகம் உதவியது.

இதன் அடுத்தகட்ட பாய்ச்சலாக இருக்கிறது, 'மதி அனுபவ அங்காடி'. சென்னை போன்ற பெருநகரங்களில் உள்ள கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் உள்ளிட்டவற்றில் நாம் பல பொருட்களைக் காண மட்டுமே முடியும். அவற்றைத் தொட்டுப் பார்க்கவோ, நுகர்ந்து பார்க்கவோ, சுவைத்துப் பார்க்கவோ இயலாது. வழக்கமாக, நாம் வாங்கும் மளிகை, துணி, வீட்டு அலங்காரப் பொருட்கள்தான் அவை எனினும், அவற்றை நாம் விலை கொடுத்து வாங்கிய பிறகே, அவற்றைத் தொட்டு, உணர முடியும்.

வழக்கமாக நாம் வாங்கிப் பயன்படுத்தும் பொருட்களுக்கே அந்த நிலை என்றால், 'அடடே... இது புதிதாக இருக்கிறதே. நாம் முயற்சித்துப் பார்க்கலாமே' என்ற எண்ணத்தை நமக்கு ஏற்படுத்தும் புதுமைப் பொருட்களுக்கு, கடைக்காரர்கள் எவ்வளவு கட்டுப்பாடுகள் விதிப்பார்கள்? அந்தக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாமல், பொருட்களை வாடிக்கையாளர்கள் தொட்டு, உணரும் அனுபவத்தைத் தருபவைதான் ஆங்கிலத்தில் 'எக்ஸ்பீரியன்ஸ் ஸ்டோர்' என்று அழைக்கப்படும் அனுபவ அங்காடிகள்.

பொதுவாக, மின் வாகனத் தயாரிப்பு நிறுவனங்களே இதுபோன்ற 'அனுபவ அங்காடி'களை அமைத்திருப்பார்கள். முதன்முறையாக, அத்தகைய அனுபவ அங்காடியை, சாமானிய மக்கள் பயன்படுத்தும் பொருட்களுக்கு அமைத்திருக்கிறது 'திராவிட மாடல் அரசு' உருவாக்கியுள்ள 'மதி அனுபவ அங்காடி'.

அன்னை தெரா மகளிர் வளாகத்தில், கண்ணாடிகளால் சூழப்பட்டிருக்கிறது அந்த அங்காடி. 'மகளிர் திட்டம்' என்பதன் சுருக்கமே 'மதி'. உள்ளே சென்று பார்த்தால், கண்ணைக் கவரும் கைவினைப் பொருட்கள், ஜவுளி வகைகள், இயற்கை உணவுப் பொருட்கள் இருக்கின்றன. அந்தப் பொருட்களை எல்லாம் நீங்கள் தொட்டு, நுகர்ந்து, சுவைத்துப் பார்க்கலாம். பிடித்திருந்தால், வாங்கிச் செல்லலாம்.

### மலைத்தேன் முதல் மூங்கில் பொருட்கள் வரை

இந்த அனுபவ அங்காடியில் உள்ள சிறப்பு என்னவென்றால், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் இங்கு கிடைக்கும். பட்டு ஜவுளிகள், கைவினைப் பொருட்கள், கைத்தறி ஆடைகள், உணவுப் பொருட்கள் மற்றும் மூலிகைப் பொருட்கள் என ஐந்து வகையான பொருட்கள் இங்கு சந்தைப்படுத்தப்படுகின்றன.

ஓர் இடத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், தாங்கள் தயாரிக்கும் பொருட்களை மாநிலத்தின் வேறு இடங்களுக்குச் சென்று விற்பனை செய்ய, குடும்பச் சுமைகள், நேரமின்மை, போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்வதில் உள்ள நெருக்கடிகள், இடைத்தரகர்கள் எனப் பல விஷயங்களைத் தாண்டி வர வேண்டிய சூழல் முன்பு இருந்தது. அவற்றை களையும் விதமாக, அந்தப் பொருட்களை எல்லாம் தமிழ்நாடு அரசால் கொள்முதல் செய்யப்பட்டு, ஒரே இடத்தில் சந்தைப்படுத்தப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. இதனால், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் போய் சேர வேண்டிய நியாயமான லாபம் முழுமையாகச் சென்றடைகிறது.

- வாரத்தில் ஏழு நாட்களும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை 'மதி அனுபவ அங்காடி' செயல்படுகிறது.
- 'ரைட்டர்ஸ் கஃபே' உடன் இணைந்து, 'மதி அனுபவ அங்காடி'யில், ஓர் அழகான, சுவையான, தரமான 'கஃபேடீரியா'வும் இயங்குகிறது.
- 'மதி அனுபவ அங்காடி'யில் செல்வந்தர் முதல் எளியவர் அவரை அனைவரும் வாங்கக் கூடிய விலைகளில் பொருட்கள் இருப்பது சிறப்பு.
- https://www.mathisandhai.com என்ற இணையதளம் மூலமாகவும் 'மதி' பொருட்களை வாங்க முடியும்.
- அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் ஒவ்வொரு மாதம் முதல் மற்றும் மூன்றாவது சனி, ஞாயிறுகளில் இயற்கைச் சந்தை நடத்தப்படுகிறது.

மிக முக்கியமாக, இந்தப் பொருட்கள் எல்லாம் அழகான வடிவமைப்பில் 'கிஃப்ட் பாக்ஸ்' ஆகவும் இருக்கின்றன. குறைந்தபட்சம் 300 ரூபாய் முதல் அதிகபட்சம் 2 ஆயிரம் ரூபாய் வரை மதிப்பிலான பொருட்கள் அந்த 'கிஃப்ட் பாக்ஸ்'களில் இருக்கின்றன.

இன்றெல்லாம், பன்னாட்டு நிறுவனங்கள் தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை நாட்களில் தங்கள் ஊழியர்களுக்குக் 'கிஃப்ட் பாக்ஸ்' கொடுப்பது வழக்கமாக இருக்கிறது. வழக்கமாக வழங்கப்படும் 'கிஃப்ட் பாக்ஸ்'களில் இனிப்பு வகைகள் மட்டுமே இருக்கும். அவ்வாறு இல்லாமல், புதுமையான, ஆரோக்கியமான, வீட்டுக்குப் பயன்படக்கூடிய பொருட்களை வழங்க வேண்டும் என்று விரும்பும் நிறுவனங்கள் இந்த 'கிஃப்ட் பாக்ஸ்'களை முயன்று பார்க்கலாம். அது தங்கள் ஊழியர்களுக்குப் பயனுள்ளதாக இருப்பதுடன், ஏழை எளிய மகளிரின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுகிறோம் என்கிற திருப்தியும் கிடைக்கும்.

### விரைவில் மாவட்டந்தோறும்...

இப்படியான ஓர் அனுபவ அங்காடி, தற்போது சென்னையில் மட்டுமே திறக்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் 18-ஆம் தேதி திறக்கப்பட்ட இந்த அங்காடிக்கு, சில நாட்களிலேயே மக்களிடம் மிகுந்த வரவேற்புப் பெற்றுள்ளது. இன்னும் மக்கள் இங்கு வேறு என்னவெல்லாம் எதிர்பார்க்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, அடுத்த கட்டமாக மாவட்டந்தோறும் ஒரு 'மதி அனுபவ அங்காடி'யைத் திறக்கும் எண்ணமும் அரசுக்கு உள்ளது.

அதுவரையில், தமிழ்நாடு முழுவதும் 156 தற்காலிக அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு அந்தந்த மாவட்டங்களில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும், அந்த மாவட்டத்துக்குரிய சிறப்புப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

நமது கழக இளைஞர் அணி செயலாளர் மற்றும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னைச் சந்திக்க வருபவர்கள் பொன்னாடைகள், பூங்கொத்துகள் ஆகியவற்றை அன்பளிப்பாக அளிப்பதற்குப் பதிலாக, மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களை வழங்க வேண்டும் என்று அறிவித்திருந்தது அனைவரும் அறிந்ததே. அவ்வாறு அளிக்கப்படும் அன்பளிப்புகள் ஆதரவற்றோர், முதியோர் உள்ளிட்ட கருணை இல்லங்களுக்கு வழங்கப்படுகின்றன. இதன் மூலம் மகளிர் சுய உதவிக்குழுவினரின் பொருளாதாரம் உயர்வதுடன், கருணை இல்லங்களில் உள்ள மக்களுக்கும் தரமான, ஆரோக்கியமான பொருட்கள் கிடைத்து, அவர்களும் பயன்பெறுகிறார்கள்.

இப்படி அனைவரையும் அரவணைத்துச் செல்வதுதான் 'திராவிட மாடல் அரசு' கொண்டிருக்கும் கொள்கை. அதனால்தான் தமிழ்நாடு 'மதி'ப்புறும் சமூகமாகவும், 'மதி' உள்ள சமூகமாகவும் இருக்கிறது..!

**...சாதனை தொடரும்**

## வெற்றிகளை வேட்டையாடும் 'ராணி'!


**ம**களிருக்கு, அரசியல் துறையில் இட ஒதுக்கீடு, சமுதாயத் துறையில் சீர்திருத்தங்கள், பொருளாதாரத் துறையில் வேலைவாய்ப்பு ஆகியவற்றின் மூலம் பல்வேறு ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை, திராவிட மாடல் அரசு முன்னெடுத்து வருகிறது.

இதன் மூலம் தமிழ்நாட்டின் உற்பத்தித் துறையில் 43 சதவிகிதம் பெண் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இந்தியாவின் உற்பத்தித் துறையில் உள்ள மொத்த பெண் தொழிலாளர்களில் 40 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பல்வேறு ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. உடலுழைப்பை நம்பி செயல்படும் உற்பத்தித் துறை மட்டுமின்றி, விளையாட்டுத் துறையிலும் பெண்கள் பல்வேறு சாதனைகளைப் படைக்கத் தொடங்கியுள்ளனர்.

உலகச் செஸ் கூட்டமைப்பு ஆண்டுதோறும் வழங்கும் 'கிராண்ட் மாஸ்டர்' பட்டத்தை தமிழ்நாட்டைச் சேர்ந்த செஸ் வீராங்கனை வைஷாலி வென்றுள்ளார். இதன் மூலம் 'தமிழ்நாட்டின் முதல் பெண் கிராண்ட் மாஸ்டர்' என்ற பட்டத்தையும், பெருமையையும், இந்தியாவில் மூன்றாவது வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

ஏற்கெனவே நாட்டிலேயே அதிக எண்ணிக்கையில் 'கிராண்ட் மாஸ்டர்'கள் உள்ள மாநிலம் என்ற பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. இப்போது இதில் பெண்களும் இடம் பிடிக்கத் தொடங்கியிருப்பது மாநிலத்தில் செஸ் விளையாட்டின் மீதான ஈடுபாட்டை அதிகரிக்கும்.

## ஃப்ளாஷ்பேக்





முத்துசாமி

### நிதியளிப்பும் திருமணமும்!

1987-ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டத்துக்கு நிதியளிப்புப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வருகை தந்திருந்தார் தலைவர் கலைஞர் அவர்கள். எளிய கழகத் தொண்டனாகிய எனது இல்லத் திருமண விழா, தலைவர் தலைமையில் நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். எனது மகன் மு.பழனிசாமி-மருமகள் பி.சாந்தி ஆகியோரது திருமணத்தை, பவானி குமார பாளையத்தில் உள்ள ஜே.கே.கே.சுந்தரம் அவர்களது இல்லத்தில் தலைவர் தலைமையேற்று நடத்தி வைத்தார். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**-எம்.என்.முத்துசாமி,**
**வட்ட அவைத் தலைவர்,**
**சென்னிமலை பேரூர், ஈரோடு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018.
வாட்ஸ்அப் எண் : 90033- 24473
மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தொலைக்காட்சி இருட்டடிப்பு!

**1989-ஆம் ஆண்டு கழக ஆட்சியின்போது, ஒன்றிய அரசின் நிர்வாகப் பொறுப்பில் உள்ள தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றில் தமிழ்நாட்டு அரசின் நிகழ்ச்சிகளை ஒலி, ஒளி பரப்பாமல் இருட்டடிப்புச் செய்வதில் முனைந்து செயல்பட்டன. இந்தப் போக்குக்கு எதிராக, கலைஞர் தலைமையில் பொதுக் கூட்டமும், கூட்டணிக் கட்சிகள் கலந்துகொண்ட மிகப் பிரமாண்ட மான ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடைபெற்றன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 319




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21-23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131